வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 15.02.2025 சனிக்கிழமை | இதழ் : 47 | பக்கங்கள் : 12




# அதானியை நிறுத்திவிட்டு சீனாவுக்கு திட்டத்தை வழங்கும் நோக்கமில்லை

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி

யாழ்ப்பாணம், பெப்ரவரி 15

**அதானி நிறுவனத்தின் காற்றாலை திட்டத்தை மாற்றி சீனாவுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ வழங்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை எனக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**

நேற்று வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட இருந்த அதானி நிறுவனத்தின் காற்றாலை மின் திட்டங்களை நிறுத்துவதாக குறித்த நிறுவனம் தெரிவித்துள்ள நிலையில் அதனைச் சீனாவுக்கு



வழங்கும் திட்டம் காரணமா என அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், சீனாவுக்கு அல்லது வேறு நாடுகளுக்கோ

11

# தையிட்டி விகாரை விடயத்தை விரைவில் தீர்த்து வைப்போம்!

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 15

உறக்கத்தில் உள்ள இனவாதத்தை மீண்டும் எழும்ப அனுமதிக்க முடியாது. அதனால் தையிட்டி விகாரை விவகாரத்தை விரைவில் தீர்த்து வைப்போம் என கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு

11

# மின்வெட்டு இனி இல்லை

கொழும்பு, பெப். 15

நாடளாவிய ரீதியில் நேற்று முதல் நாளாந்த மின்வெட்டு இருக்காது என்று எரிசக்தி அமைச்சர் பொறியாளர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, தேசிய மின்சாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட தொழிற்நுட்பக் கோளாறு காரணமாக, நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையத்தில் உள்ள மூன்று மின்

11

# கஜேந்திரகுமாருக்கு நீதிமன்று பிணை

யாழ்ப்பாணம், பெப். 15

தையிட்டியில் சட்ட விரோதமாக கட்டப்பட்ட விகாரையை இடிக்க மக்கள் ஒன்று சேர வேண்டும் என்று சமூக ஊடகங்களில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பெயரை குறிப்பிட்டு பரப்பப்பட்ட துண்டுப் பிரசுரம் தொடர்பில்

11

# காற்றாலை மின்சார திட்டம் அடுத்த வாரம் மீண்டும் பேச்சு

## இணங்கியது அதானி நிறுவனம்

கொழும்பு, பெப். 15

அதானி நிறுவனம் இலங்கையில் மன்னார் பிரதேசத்தில் நிர்மாணிக்க திட்டமிட்டிருந்த ஒரு பில்லியன் டொலர் முதலீட்டுடனான காற்றாலை மின்சார உற்பத்தி திட்டத்திலிருந்து விலகி கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவித்திருந்த நிலையில், இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்களின் தலையீட்டில் அடுத்த வாரம் முக்கியத்துவம் வாய்ந்த பேச்சு ஒன்றை நடத்த இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மன்னாரிலும், பூநகரியில்

11

# மின்வெட்டுக்கு வருத்தம் தெரிவிக்கிறார் அமைச்சர்

கொழும்பு, பெப். 15

நாடளாவிய ரீதியில் இதுவரை ஏற்பட்டுள்ள மின்வெட்டு காரணமாக மின்சார நுகர்வோருக்கு ஏற்பட்டுள்ள சிரமத்துக்கு மின்சக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி வருத்தம் தெரிவித்தார்.

நாட்டில் மீண்டும் இதுபோன்ற நிலை ஏற்படாமல் தடுக்க தேவையான குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

11

# இலங்கையில் அணு மின் நிலையம் பேச்சுக்களில் முன்னேற்றம் இல்லை

## கூறுகின்றார் ரஷ்ய தூதுவர்

கொழும்பு, பெப். 15

இலங்கையில் அணுமின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு ஆதரவளிக்க தனது நாடு ஒப்புக்கொண்ட போதிலும் இலங்கை சார்பில் அதற்காக அதிக அவதானம் செலுத்தப்படவில்லை என கொழும்பிலுள்ள ரஷ்ய தூதுவர் லெவன் எஸ் தகர்யன் தெரிவித்தார்.

இந்த அணுமின் நிலையத் திட்டம் தொடர்பில் இலங்கையுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றாலும், அவற்றில் குறிப்பிடத்தக்க

11

# யாழில் போராடும் பட்டதாரிகளுக்கு புலனாய்வுப் பிரிவினால் அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 15

போராட்டத்தில் ஈடுபடும்போது புலனாய்வுப் பிரிவு மற்றும் அரச தரப்பினால் தமக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.சசிகரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்னால் நேற்று நடைபெற்ற போராட்டத்தின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபடுகின்றபோது ஏற்படுகின்ற அச்சுறுத்தல்களால்

11

# சஜித் அணிக்குள் ஹர்ஷவுக்கு 'வெட்டு'

கொழும்பு, பெப். 15

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட தலைவர் பதவி அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும், அவருக்கு அப்பதவி வழங்கப்படவில்லை என தெரியவருகின்றது.

மாறாக கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ, கொழும்பு மாவட்டத் தலைவர் பதவியையும் தன்வசம் வைத்திருக்க முடிவு செய்துள்ளார் என அறியமுடிகின்றது.

11

# காலாவதியான தீயணைப்பு கருவியால் கிளிநொச்சி வைத்தியசாலையில் பதற்றம்

கிளிநொச்சி, பெப். 15

கிளிநொச்சி வைத்தியசாலையில் காலாவதியான தீயணைப்புக் கருவிகளால் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நேற்று முன்தினம் தீயினால் ஏற்பட்ட அவசர நிலையை கட்டுப்படுத்த முயன்றபோது, வைத்தியசாலையில் பொருத்தப்பட்டிருந்த தீயணைப்புக் கருவிகள் இயங்காமல் போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அவசர நேரத்தில் தீயணைப்புக் கருவிகளை பயன்படுத்தியவேளை அவை செயல்படாத காரணத்தால் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதன் பின்னர், நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் அருகிலமைக்கப்பட்ட புதிய விசேட பெண்கள்

11

## உள்ளூராட்சி தேர்தல் சட்டமூலம்

# விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்!

## உயர் நீதிமன்ற தீர்ப்பை அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, பெப். 15

உள்ளூராட்சித் தேர்தல்கள் சட்டமூலம் பாராளுமன்றத்தித்தில் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன அறிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று காலை கூடியபோது

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உடனடித் தீர்வு வழங்கவேண்டும்

## முன்னாள் போராளி உண்ணாவிரதம்

முல்லைத்தீவு, பெப். 15

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உடனடி தீர்வு வழங்கப்பட வேண்டும்வேண்டும் என்பது உட்பட 10 கோரிக்கைகளை முன்வைத்து முன்னாள் போராளியொருவர் சாகும் வரையான உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.**



ஒரு காலை இழந்த முன்னாள் போராளியான அ. வனகுலராசா என்பவரே முள்ளிவாய்க்கால் நினைவுமுற்ற வளாகத்தில் நேற்று இப்போராட்டத்தை ஆரம்பித்தார்.

தனது கோரிக்கைகளுக்கு நியாயம் கிடைக்கும்வரை போராட்டம் தொடரும் என அவர் அறிவித்துள்ளார். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு உடனடி தீர்வு வழங்கப்படவேண்டும், மாவீரர் துயிலும் இல்லங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் உடனடியாக அகற்றப்படவேண்டும், பிரதேசவாதம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

காணி மற்றும் வீடு இல்லாதவர்களுக்கு காணி, வீடு வழங்க வேண்டும், நாட்டில் யாசகர்கள் இல்லாத நிலை உருவாக்கப்பட வேண்டும் எனவும் முன்னாள் போராளியான அழகரெத்தினம் வனகுலராசா கோரிக்கை முன்வைத்துள்ளார். (அ)

# தருமபுரத்தில் அறுவடைவிழா



கிளிநொச்சி, பெப். 15

நவீன விவசாயத் தொழில் நுட்பங்களை வழங்கி, விவசாய உற்பத்தி மூலம் விவசாயிகள் உச்ச பலனடையும் முகமாக விவசாய திணைக்களம் மேற்கொண்டுவரும் செயல்பாடுகளில் ஒன்றான வயல் அறுவடை விழா கிளிநொச்சி தருமபுரம் பகுதியில் நேற்று நடைபெற்றது.

பரசூட் முறையில் பிஜி 366 வெள்ளை இன நெல் நடுகை செய்யப்பட்ட தர்மபுரம் விவசாய போதனாசிரியர் பிரிவின் தருமபுரம் கிழக்கு பகுதியில் இந்த வயல் அறுவடை விழா நடைபெற்றது.

தருமபுரம் பகுதிக்குரிய விவசாய போதனாசிரியர் க. சரண்யா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் வி. சோதிலட்சுமி கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர்கள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# விவசாயிகளின் நன்மை கருதி சோளத்துக்கும் நிர்ணய விலை

கொழும்பு, பெப். 15

விவசாயிகளின் நன்மை கருதி சோளத்துக்கு நிர்ணய விலை தீர்மானிக்கப்பட வேண்டும் என தேசிய விவசாயிகளின் ஒற்றுமை அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அந்த அமைப்பின் தலைவர் அநுராத தென்னக்கோன் இதனை வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரிசிக்கான நிர்ணய விலை தொடர்பில் விவசாய அமைப்புகள் ஒன்றிணைந்த வேலைத் திட்டம் ஒன்றை அரசாங்கத்திடம் முன்வைத்தன. இது தொடர்பில் மக்கள் மத்தியில் கருத்தாடல் உருவானது.

பெரும்போகத்தில் நெல் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மேலதிகமாக ஏனைய விவசாயிகள் குறித்தும் கவனம் செலுத்தப்படவேண்டும்.

குறிப்பாக சோளத்துக்கு நிர்ணய விலை அவசியமாகும். அநுராதபுரம், பொலனறுவை, அம்பாறை, புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களில் அதிகமாக சோளம் பயிரிடப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் சுமார் நான்கு இலட்சம் ஏக்கர் நிலப் பரப்பில் பயிரிடப்பட்டுள்ளது.

சோளத்துக்கு நிர்ணய விலை இல்லாமல் இந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆதலால், இந்த விடயத்தில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். சோளம் உற்பத்தி செய்யும் விவசாயிகள் பாதிக்கப்பட்டால் சோளத்தை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும்-என்றார். (அ)

# வட்டுக்கோட்டையில் சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 15

14 வயது மாணவி ஒருவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக நேற்றையதினம் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

இந்த சம்பவமானது செட்டியார்மடம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த குற்றச்செயலுடன் சந்தேகநபரான 21 வயதுடைய இளைஞர் தலைமறைவாகியுள்ளார். மருத்துவ பரிசோதனைக்காக சிறுமி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ - 05)

# வடக்கில் விவசாயத்துக்குப் பயன்படும் கிருமிநாசினி போத்தல்கள் கொள்வனவு

யாழ்ப்பாணம், பெப். 15

வடக்கு மாகாண விவசாயிகள் பயன்படுத்துகின்ற கிருமிநாசினி போத்தல்களை கொள்வனவு செய்யும் வேலைத் திட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ளதாக வட மாகாண விவசாய பிரதி பணிப்பாளர் அஞ்சனா சிறீரங்கன் தெரிவித்துள்ளார்.

எனவே விவசாயிகள் பயன்படுத்துகின்ற கிருமி நாசினி போத்தல்களை சூழலில் வீசாது அவற்றை தமது தோட்டப்புறங்களில் வைக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.


பாதுகாப்பான முறையில் வைக்கப்பட்டால் அவற்றை விவசாயத் திணைக்களம் கொள்வனவு செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய கிளீன் சிறிலங்கா என்ற வேலைத் திட்டத்திற்கு அமைவாக இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதாக வட மாகாண விவசாய பிரதி பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விவசாய திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் விவசாய நிறுவனங்கள் இணைந்து இதனை மீள் சுழற்சி செய்வதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக இந்த போத்தல்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

எனவே மண்ணை வளப்படுத்தி அடுத்த சந்ததியினக்கு சுத்தமான சூழலை கையளிக்க வேண்டியது அனைவரினதும் தலையாய கடமை என்றும் வட மாகாண விவசாயப் பிரதி பணிப்பாளர் அஞ்சனா சிறீரங்கன் தெரிவித்துள்ளார். (அ)

# கிளிநொச்சியில் இடம்பெற்ற மனைப்பொருளியல் கண்காட்சி



கிளிநொச்சி, பெப். 15

வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் கண்டாவளை பிரதேச செயலக மகளீர் அபிருத்தி நிலையத்தின் மனைப்பொருளியல் கண்காட்சி விசுவமடு மத்தி சனசமூக நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

மனைப்பொருளியல் பயிற்சி பெறுபவர்களின் ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

கண்டாவளை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. சுரேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கண்டாவளை பிரதேச செயலகத்தின் கணக்காளர் பி. கார்த்திகா கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தர் சி.சுமதி, மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். உமாபாலன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் அமலராசா, நிர்வாக உத்தியோகத்தர் பி.சுரேகா, கிராம அலுவலகர் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# போலியாக மருந்து பெற்றவர்களின் பட்டியல் விரைவில்

கொழும்பு, பெப். 15

போலி அடையாள அட்டை இலக்கங்களை முன்வைத்து இராணுவ வைத்தியசாலையில் அதிக அளவிலான மருந்துகளை பெற்றவர்களின் பட்டியலை வெகு விரைவில் அரசாங்கம் வெளிப்படுத்தவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளின் அடிப்படையிலான தகவல்களை எதிர்வரும் காலங்களில் நாட்டுக்கு வெளிப்படுத்த அரசாங்கம் தயாராக உள்ளது.

கடந்த அரசாங்கங்களின் போது வழங்கப்பட்ட மதுபான அனுமதிப்பத்திரங்களை பெற்றவர்களுக்கு இடையிலான உறவுமுறை மற்றும் பணப் பரிமாற்றங்கள் தொடர்பிலும் தற்போதைய அரசாங்கம் விசாரணை மேற்கொண்டு வருகிறது. (அ)

# யு. எஸ். எய்ட் கொடுக்கல் வாங்கலை விசாரிக்க பாராளுமன்ற தெரிவுக்குழு!

கொழும்பு, பெப். 15

யு.எஸ். எய்ட் உடனான கொடுக்கல் வாங்கல் குறித்து விசாரணை செய்வதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று கூடியபோது எதிர்க்கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகர முன்வைத்த கேள்விக்கு பதிலளிக்கும்போதே சபாநாயகர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் யுஎஸ் எயிட் கொடுக்கல்வாங்கல் குறித்து வெளிநாடுகளில் அதிகம் பேசப்படுகிறது. இது தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உங்களிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

விசேடமாக இந்த விடயத்தில் பிரதமரின் பெயரும் உள்வாங்கப்பட்டுள்ளதால் அரசாங்கத்துக்கும் இழுக்காகும்.

ஆதலால், தெரிவுக்குழுவை அமைப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்துள்ளீர்களா? எவ்வாறான நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன் - என்றார்.

இதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில்-

அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eelanadu
ஈழநாடு
15.02.2025 சனிக்கிழமை
பிலவ வருடம், மாசி 02

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்னும் கோரிக்கை

சிவில் சமூகக் குழுக்களாக, சிவில் சமூக அமையமாக, தங்களை அடையாளப்படுத்திக் கொளபவர்கள் அவ்வப்போது - பெரும்பாலும் "அத்தி பூத்தாற்போல்" என்று சொல்வது போன்று, சில திடீர் அறிக்கைகளை வெளியிடுவதுண்டு. தமிழ் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்னும் கோரிக்கையே அறிக்கையின் சாராம்சமாக இருப்பதுண்டு. ஆனால், இவ்வாறு கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்று கூறுபவர்கள் தாங்கள் விரும்பும் கட்சிகள் மட்டுமே ஒன்றுபட வேண்டும் என்று மட்டுமே கூறிவருகின்றனர் - தவறியும் அனைத்துத் தமிழ் கட்சிகளும் சில பொது விடயங்களில் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும் என்று கூறுவதில்லை.

உண்மையில், இன்றுள்ள அரசியல் சூழலில் அவ்வாறான முயற்சிதான் தேவையானது. தமிழ்த் தேசியம் என்று ஒரு சிலரை வகைப்படுத்துவதும் சிலரை அதற்கு பொருத்தமற்றவர்கள் அல்லது அதற்குத் தகுதியற்றவர்கள் என்று வகைப்படுத்தும் போக்கே கடந்த பதினைந்து வருடகால ஒற்றுமை முயற்சிகளின் அடிப்படையாக இருக்கின்றது. இவ்வாறான ஒற்றுமை முயற்சிகள் பயனற்றவை என்பதை அனுபவ ரீதியாக உணர்ந்த பின்னரும்கூட, அவ்வாறான ஒற்றுமை பற்றியே இவ்வாறான சிவில் சமூகக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

ஈழத் தமிழ் மக்கள் தற்போதிருக்கும் நிலையிலிருந்து ஒரு படியாவது முன்னோக்கி பயணிக்க வேண்டும் என்று உண்மையிலேயே சிந்தித்தால், அதற்காக உழைக்க வேண்டும் என்று எண்ணினால், அனைத்துத் தமிழக் கட்சிகளையும் முதலில் ஓர் அரங்குக்குக் கொண்டுவர வேண்டும். ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் - அதவாது, இணங்கிச் செயல்பட வேண்டிய விடயங்களில் எவ்வாறு இணங்கிச் செயல்பட முடியுமென்று உரையாடப்பட வேண்டும்.

ஈழத் தமிழினம் வரலாற்றில் என்றுமில்லாதளவுக்கு அரசியல்ரீதியில் மிகவும் பலவீனமாக இருக்கின்றது. இதனை கையறு நிலை என்று கூறுவதுதான் மிகவும் சரியாக இருக்க முடியும். இவ்வாறானதொரு சூழலில் தமிழ்த் தேசிய தரப்பு - தமிழ்த் தேசியமற்ற தரப்பு என்று தமிழ்க் கட்சிகளை வகைப்படுத்தி சிந்திப்பது தவறானது. இதனைப் புரிந்து கொள்வதுதான் இன்றுள்ள சவாலான அரசியல் சூழலில் கட்சிகளின் ஒற்றுமையை உணரச் செய்வதற்கான முதல் படியாக அமையும். அவ்வாறில்லாது தொடர்ந்தும் ஒரு தீண்டாமையை பேணிப் பாதுகாக்கும் முயற்சிகளால் தமிழ் மக்கள் - ஒரு மக்கள் கூட்டமென்னும் வகையில் அவர்கள் எதிர்கொண்டுவரும் பிரச்னைகளுக்கு ஆகக் குறைந்தளவிலான தீர்வுகளைக்கூட காண முடியாது.

கடந்த பதினைந்து வருட கால அனுபவங்கள் சில விடயங்களை தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றது. அதாவது, இவ்வாறான தீண்டாமை மனோபாவ அரசியலால் எதனையும் சாதிக்க முடியாது. இதனை உணராமல் தொடர்ந்தும் செயல்படுவதால் நிலைமைகள் மேலும் மோசமடையுமே தவிர, எந்தவொரு விடயத்திலும் முன்னோக்கி பயணிக்கும் ஆற்றலை தமிழ்க் கட்சிகள் பெறப் போவதில்லை. வடக்கு - கிழக்கை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் வர வேண்டும். அதற்கான முயற்சிகளை சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்வோர் முன்னெடுக்க வேண்டும்.

# வேலையில்லா பட்டதாரிகள் யாழில் மீண்டும் போராட்டம்



யாழ்ப்பாணம், பெப். 15

அரசாங்க வேலை வாய்ப்பினை வழங்குமாறு கோரி வேலையில்லாப் பட்டதாரிகள் நேற்றையதினம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பட்டதாரிகள் கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 2025ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு வேலைத் திட்டம் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழு கூட்டமானது யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்த நிலையில் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.(எ- 05)

# வரவு - செலவு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.15

2025 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் நிலத்தடி நீர் மாசடைதல், கழிவுகள் அகற்றல், நன்னீர் - குடிநீர் திட்டம், சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பு, உள்ளூார் கடன், உற்பத்திகள், தேசிய அபிவிருத்தி திட்டமிடல், ஒருங்கிணைந்த கிராமிய சமூக பொருளாதார கட்டமைப்பை வலுப்படுத்தல் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இந்த கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிறீபவானந்தராஜா, ஜெ. றஜீவன், க. இளங்குமரன், மேலதிக அரசாங்க அதிபர் க. சிறீமோகனன், திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரகுமார், வடமாகாண அவைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், வடமாகாண ஆளுநரின் செயலாளர் நந்தகோபன், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச சபை செயலாளர்கள், பதவிநிலை அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-05)




வடமராட்சி கிழக்கு ஆழியவளை சி. சி. த. க. வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இதில், பிரதம விருந்தினராக கிளிநொச்சி பிராந்திய சமுதாய மருத்துவ உத்தியோகத்தர் வேலுப்பிள்ளை சிவநேசன் கலந்து கொண்டார்.
(படங்கள் :- கஜிந்தன்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வேற்று மதத்தவர் உதவுவார்.

**இடபம்**
தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். நண்பர்கள் உதவுவார்கள். எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப்போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும்.

**மிதுனம்**
பேச்சில் முதிர்ச்சி தெரியும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். விருந்தினர்களின் வருகையால் வீடு களை கட்டும். சொத்துப் பிரச்னைக்கு சுமுகத் தீர்வு கிடைக்கும்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நீண்டநாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். திடீர் பணவரவு உண்டு. விலை உயர்ந் தப் பொருட்கள் வாங்குவீர்கள். இனிமையான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவா லான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படும். வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**கன்னி**
குடும்பத்தில் விட்டு கொடுத்து போவது நல்லது. பழைய கடனை தீர்க்க முயற்சி செய்வீர்கள். உடல்நலத்தில் கவனம் தேவை. ஆடம்பர செலவுகளால் சேமிப்புகள் கரையும்.

**துலாம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். சாதிக்கும் நாள்.

**விருச்சிகம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்து கொள்வார்கள். வியாபாரத்தில் புகழ்பெற்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்வீர்கள்.

**தனுசு**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உற்சாகமான நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். பணப்பற்றாக் குறையால் பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும்.

**கும்பம்**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணம் கிடைக்கும். மனைவி வழியில் ஆதரவு பெருகும்.

**மீனம்**
நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அமோகமான நாள்.

# பாராளுமன்ற உறுப்பினர்களின் முன்மொழிவு மிகவும் அவசியம்

## பரிந்துரைகளை மாற்றியமைக்க யாழ். ஒருங்கிணைப்பு குழு முஸ்தீபு

யாழ்ப்பாணம், பெப்.15

பாராளுமன்ற உறுப்பினர்களின் முன்மொழிவுகள் மிகவும் அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்றையதினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது

இதன்போது, பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்தும் அனுமதியை பிரதேச ஒருங்கிணைப்பு குழு இன்மையால் அதை நடைமுறைப்படுத்தும் அனுமதிக்காக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு விடப்பட்டது.

அபிவிருத்திக்காக யாழ்ப்பாணத்துக்கு 56 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை புறந்தள்ளி அரச அதிகாரிகள் ஊடாக முன்னெடுக்க திட்டங்களை முன்னெடுக்க மாவட்ட ஒருங்கிணைப்பு குழு எடுத்த முயற்சிக்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சமர்ப்பிக்கப்பட முன்மொழிவு மாற்றியமைக்கப்பட்டு மீண்டும் சமர்பிக்க இணக்கப்பாடு எட்டப்பட்டது.

குறிப்பாக 2025 ஆம் ஆண்டின் வரவு - செலவு திட்டத்தின் முன்னரான முன்மொழிவின் கீழ் ஒதுக்கப்பட்ட 56 மில்லியன் ரூபாய் நிதியை மாவட்ட செயலகம் ஊடாக கையாள்வது என்ற முன்மொழிவு வைக்கப்பட்டபோது அதை ஏற்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நிதி திட்டமிடல் - பொருளாதார அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச மட்டத்தில் எடுக்கப்படும் முன்மொழிவை மாவட்ட அபிவிருத்திக் குழுவுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னெடுத்தல் என்று கூறப்பட்டுள்ளது.

இது குறிப்பாக கடந்த 77 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவரும் அவிருத்தி தொடர்பான திட்ட முன்மொழிவு பொறிமுறையை இம்முறை மாற்றி பாராளுமன்ற உறுப்பினர்களின் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படுகின்றன. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

குறிப்பாக கடந்த ஆட்சியில் இவ்வாறான ஒரு நிலை கொண்டுவரப்பட்டது. ஆனால், அன்றிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்றைய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இருந்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் அன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் அவர் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்ததன் அடிப்படையில் மேலதிகமாக நிதி ஒதுக்கீடு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், இன்று அவ்வாறான ஒரு நிலை இல்லாதுள்ளது.

அந்த வகையில் பாராளுமன்ற உறுப்பினர் ஊடாக ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாத இந்த சமர்ப்பிப்பை ஏற்க முடியாது.

இதை மாற்றியமைத்து பாராளுமன்ற உறுப்பினர்களது முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்தினார்.

இந்த நிலையில் அவரின் வலியுறுத்தலுக்கு இணங்கிய ஒருங்கிணைப்புக் குழு தலைவர், அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், குறித்த 56 மில்லியன் ரூபாய் நிதியில் 6 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட யாழ். மாவட்டத்தில் ஒருவருக்கு 9 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதனடிப்படையில் முன்வைக்கப்படும் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் இணக்கம் காணப்பட்டது. (எ-05)

# கட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது!


கிளிநொச்சி, பெப்.15

கட்டுத் துப்பாக்கி வைத்திருந்த 30 வயது நபர் ஒருவரை முழங்காவில் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் குறித்த நபரை முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)



வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட் டியை முன்னிட்டு நேற்றுக் காலை மரதன் ஓட்டப் போட்டி நடைபெற்றது.




குருநகர் புனித யாகப்பர் ஆலய புனித யோசவ்வாஸ் இளையோர் மன்றத்தின் 3ஆவது கலை விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை குருநகர் கலையரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

(படங்கள் :- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யு.எஸ்.எய்ட் நிறுவனத்திடம் நிதியை பெற்றாரா ஹரிணி?

## வெளிப்படுத்த கோருகிறது பெரமுன

கொழும்பு, பெப். 15

**பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய அமெரிக்காவின் யு.எஸ்.எய்ட் நிறுவனத்தில் இருந்து நிதி பெற்றதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு குறித்து பிரதமர் நாட்டுக்கு உண்மையை பகிரங்கப்படுத்த வேண்டும். தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகள் இலங்கையின் பாரம்பரியத்துக்கு முரண்பட்டதாக உள்ளது என பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பொதுஜன பெரமுன அதிகாரத்தில் இருந்தபோதும், இல்லாதபோதும் தேசியத் தையும், பௌத்த மதத்தையும் முன்னிலைப்படுத்தி செயற் பட்டுள்ளது. சுதந்திர கட்சியி லிருந்து வெளியேறியதன் பின் அந்த கட்சியின் அடிப்படை கொள்கைகளை முழுமையாகச் செயற்படுத்தியுள்ளோம்.

யு.எஸ்.எய்ட் நிறுவனம் இலங்கை, இந்தியா, பங்களா தேஷ், பாகிஸ்தான், இந்தோ னேசியா ஆகிய நாடுகளில் அரசாங்கங்களை மாற்றுவ தற்கும், தேர்தல் செயற்பாடு களுக்கும் நிதியளித்துள்ளதாக அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி உத்தியோகபூர் வமாக குறிப்பிட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டு போராட்டத்தின்போது இந்த நிறுவனம் நேரடியாகவும், மறைமுகமாகவும் போராட்டக் காரர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட்டது. இந்த நிறுவ னத்தில் இருந்து நிதி பெற்றுக் கொண்டவர்கள் மற்றும் அந்த நிதி பயன்படுத்தப்பட்ட விதம் குறித்து பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை அமைத்து விசார ணைகளை மேற்கொள்ளுமாறு பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ சபாநாயகரிடம் எழுத்துமூலமாக அறிவித்துள் ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தற் போது குறிப்பிட்ட விடயங் களை நாங்கள் கடந்த காலங் களில் குறிப்பிட்டோம். இத னால் நாங்கள் இனவாதிக ளாகவும்,மதவாதிகளாகவும் ஒரு தரப்பினரால் சித்தரிக்கப் பட்டோம்.

அமெரிக்காவின் யு.எஸ். எய்ட் நிறுவனத்திடமிருந்து பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர உட்பட முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் நிதி பெற் றுள்ளதாக சமூக வலைத்தளங் கள் ஊடாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இந்த குற்றச்சாட்டு குறித்து நாட்டின் இரண்டாம் பிரஜை யான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நாட்டுக்கு உண்மை யை குறிப்பிட வேண்டும்- என் றார். (அ)

# இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடும் அமெ.தூதுவர் ஜூலி சங்

## சரத் வீரசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 15

இலங்கைக்கான அமெரிக் கத் தூதுவர் ஜூலி சங் பிரிவி னைவாதிகளுடன் ஒன்றி ணைந்து இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டுள் ளார். போராட்ட காலப் பகுதி யிலும் அவர் முறையற்ற வகை யில் செயற்பட்டார். அவரை மீண்டும் அமெரிக்காவுக்கு அழைக்குமாறு அமெரிக்க ஜனாதிபதிக்கு எழுத்து மூல மாக அறிவிப்போம் என பொதுஜன பெரமுனவின் முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கையில் பிரிவினைவா தத்துக்கு எதிரான கூட்டணி யினர் கொழும்பில் உள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக கவன யீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட் டத்தில் கலந்து கொண்டு கருத் துரைக்கையில் சரத் வீரசேகர மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-இலங்கைக்கான அமெரிக் கத் தூதுவர் ஜூலி சங் இலங் கையின் இறைய ாண்மைக் கும்,சுயாட்சிக்கும் சவால் விடுக் கும் வகையில் செயற்பட்டுள் ளார். நாட்டின் உள்ளக விவ காரங்களில் தலையிட்டுள்ளார். அத்துடன் வியன்னா ஒப்பந்தத் தையும் மீறியுள்ளார்.

எமது அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தின் போது அமெரிக்கத் தூதுவர் முறையற்ற வகையில் செயற் பட்டார். பிரிவினைவாதிக ளுடன் ஒன்றிணைந்து செயற் பட்டார். அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார். ஆகவே இவரை மீண்டும் அமெரிக்காவுக்கு அழைத்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு அமெரிக்க ஜனாதிபதியிடம் வலியுறுத்து கிறோம்.

பாலினம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக அமெரிக் காவின் யு.எஸ்.எய்ட் நிறுவனம் பல மில்லியன் டொலர்களை செலவழித்துள்ளதாக அமெரிக் காவின் புதிய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் கலாசாரத்தை சீரழிப்பதற்காகவே இவ்வா றான செயற்பாடுகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன.ஆகவே இவ்விடயம் குறித்து முறை யான விசாரணைகளை மேற் கொள்ளுமாறும், நிதி பெற்றுக் கொண்டவர்களின் விவரங் களை பகிரங்கப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம்-என் றார். (அ)

### லசந்த படுகொலை விவகாரம்

# இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிலைப்பாடு குறித்து அகிம்சா அதிருப்தி

கொழும்பு, பெப். 15

சட்டமா அதிபர் செயற் பட்ட விதத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் நியா யப்படுத்தியமை குறித்து படு கொலை செய்யப்பட்ட சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் கடும் விசனமும் அதிருப்தியும் வெளி யிட்டுள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கபடநாடக மாடுகின்றார், இரட்டை நிலைப்பாட்டை பேணுகின் றார் என தனது கடிதத்தில் தெரிவித்துள்ள அஹிம்சா விக்கிரமதுங்க,

சட்டமா அதிபர் தனது தந்தையின் கொலை விசாரணைகளுக்கு வேண்டுமென்றே இடையூறு விளைவிக்கின்றார் என தெரிவித்துள்ளார்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருக்கு எழு திய கடிதத்திலேயே அஹிம்சா விக்கிரமதுங்க தனது அதிருப் தியை வெளியிட்டுள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர்,பிரதமர், நீதியமைச்சர்,எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கும் இந்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரி வித்துள்ளதாவது-குற்றத்தினால் பாதிக்கப்பட்டவருக்கு உள்ள உரிமையை பாதுகாப்பதற்கா கவும் எங்கள் குற்றவியல் நீதித் துறையின் நேர்மையை தன் மையை பாதுகாப்பதற்காகவும் துணிச்சலான நடவடிக்கை களை எடுத்தமைக்காக ஜனாதிபதியை அச்சுறுத்தும் விதத்தில் நீங்கள் 07-02-2025 எழுதிய கடிதத்தை பார்த்து கவலையடைந்தேன்.

2024 ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி வழங்கிய பேட்டி ஒன்றில் மனித உரிமைகளுக் காக குரல் கொடுப்பதில்-செயற்படுவதில் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் முன்னணியில் நிற்பதாக நீங்கள் தெரிவித்திருந்தீர்கள்.

நீங்கள் விசேடமாக எனது தந்தை லசந்த விக்கிரமதுங்க வின் கொலை குறித்து குறிப் பிட்டிருந்தீர்கள் "மிகச் சமீபத் தில் பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்க விவகாரம் தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்தியிருந்தோம் அவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினரும் கூட" என நீங்கள் தெரிவித்திருந்தீர் கள்.

ஆம். 2009 ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி பரவலாக கண்டிக் கப்பட்ட அரசாங்கத்தின் படுகொலையினால் அவரின் உயிர் பறிக்கப்படும் வரை எனது தந்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆயுள்கால உறுப்பினராக விளங்கினார்.

அவரது பத்தி ரிகைகள் சர்வதேச அளவில் வாசிக்கப்பட்டன.

எனினும் அவர் பணிக்கு செல்கையில் படுகொலை செய்யப்பட்டு 16 வருடங்களின் பின்னரும் நீங்கள் அவரை பற்றியோ அவருக்கு நீதி வழங் கப்படவேண்டும் என்பது குறித்தோ ஒரு வார்த்தை கூற குறிப்பிடவில்லை.-என்றுள் ளது. (அ)

# வெளிப்படைத் தன்மையுடன் சகலருக்கும் சமமான வரிக்கொள்கை ஒன்று வேண்டும்

கொழும்பு, பெப். 15

வெளிப்படைத்தன்மை யுடன் அனைவருக்கும் சமமான வரி கொள்கை ஒன்றை மேற் கொள்வது வெளிநாட்டு முதலீ டுகளை இலங்கைக்கு கொண் டுவருவதற்கு மிகவும் பரந்து பட்ட பின்புலத்தை உருவாக்கு வதாக அமெரிக்கா தெரிவித் துள்ளது.

இலங்கையின் மூலோபாய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு மனித வளத்தை வலுப்படுத்த தொழில்நுட்ப உதவிகளை வழங்க தயாராக இருப்பதாகவும் அமெரிக்கா கூறியுள்ளது.

அமெரிக்க தூதுக் குழுவி னர் தொழிலாளர் அமைச்சர் அனில் ஜயந்த பெர்ணாந்துவை தொழில்அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினர். இதன் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

நாட்டின் மனிதவள மேம் பாட்டு செயல்முறைக்கு திறம் பட பங்களிக்க தேவையான பயிற்சி நடவடிக்கைகளுக்கும் தனது பங்களிப்பை வழங்க முடியும் என்பதுடன் இந்த நாட்டின் அபிவிருத்திச் செயற் பாட்டுக்கு அமெரிக்க மனித வளத்தை வினைத்திறன் மிக்க தாக தேவையான பயிற்சி நடவ டிக்கைகளுக்கு பங்களிக்க முடி யும் எனவும் அவர்கள் தெரிவித் துள்ளனர்.

வெளிப் படைத்தன்மை யுடன் அனைவருக்கும் சமமான வரி கொள்கை ஒன்றை மேற் கொள்வது வெளிநாட்டு முதலீ டுகளை இலங்கைக்கு கொண் டுவருவதற்கு மிகவும் பரந்து பட்ட பின்புலத்தை உருவாக்கு வதாக இதன்போது அவர்கள் மிகவும் வலியுறுத்தி தெரிவித்த னர்.

இலங்கையின் முன்னுரிமை களுக்கு ஏற்ப முதலீடுகளை கொண்டுவருவதற்கு தமது அரசாங்கம் தயாராக இருப்பதா கவும்,

வரவு-செலவுத் திட்டத் தில் முன்னுரிமை மற்றும் இலங்கையின் அபிவிருத்தி இலக்குகள் மற்றும் மூலோபா யங்களுக்கு ஏற்ப அந்த முதலீடு கள் மற்றும் வியாபாரங்களை அபிவிருத்தி செய்வதற்கும் தயாராக இருப்பதாகவும் இதன்போது வலியுறுத்தப் பட்டது. (அ)

# சதொச மூலம் மீன் விற்பனை

கொழும்பு, பெப். 15

சதொச மூலம் மீன்களை விற்பனை செய்வதற்காக கடற் றொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்களுக்கிடையில் கூட்டுத் திட்டமொன்றை ஆரம்பிக்க உள்ளதாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

கடற்றொழில், நீரியல் மற் றும் கடல் வளங்கள் அலுவல் கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் முத லாவது கூட்டம் பாரா ளுமன் றத்தில் இடம்பெற்ற போதே அமைச்சர் வசந்த சமரசிங்க இவ்வாறு கூறினார். (அ)

# பருகுவதற்கு உகந்த குடிதண்ணீர் ஐநூறு பாடசாலைகளில் இல்லை!

கொழும்பு, பெப். 16

நாடளாவிய ரீதியில் உள்ள சுமார் 500 பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு பருகு வதற்கு உகந்த குடிதண்ணீர் இல்லை என இலங்கை அதிபர் கள் சங்கத்தின் செயலாளர் பியசறி பெர்ணான்டோ தெரிவித்தார்.

கணிசமான எண்ணிக்கை யிலான பாடசாலைகளில் குடிதண்ணீரைப் பாதுகாப்ப தற்கான சரியான அமைப்பு இல்லை எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, பாடசாலை மலசல கூடங்கள் மற்றும் தண் ணீர் வசதிகளில் சிக்கல்கள் நில வுவதால் மாணவர்களின் சுகா தார பாதுகாப்புத் திட்டங்க ளுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்துவதாக அவர் தெரிவித்தார்.

வடமேற்கு, ஊவா, வடமத் திய, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள சில பாடசாலைகளில் போதுமான கழிப்பறை வசதிகள் இல்லை என்று பெர்னாண்டோ சுட்டிக் காட்டினார்.

மாணவர்களின் எண்ணிக் கையின் அடிப்படையில் கட் டப்பட வேண்டிய கழிப்பறை களின் எண்ணிக்கையை உள் ளடக்கிய சுற்றறிக்கைகள் வெளி யிடப்பட்டாலும், சில பாடசா லைகளில் அந்த சுற்றறிக்கை யின்படிகூட போதுமான கழிப்பறைகள் இல்லை என்று அவர் வலியுறுத்தினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரணிகளை ஒடுக்கச் சதி!

## சாடுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, பெப். 15

**எதிரணிகள் மற்றும் அரச ஊழியர்களை அச்சுறுத்தி, ஒடுக்கி ஆட்சியை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றஞ் சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பல வாக்குறுதிகளை தேசிய மக்கள் சக்தி வழங்கியது. அதனை தற்போது நிறைவேற்ற முடியாதுள்ளதால் நாடாளுமன்றத்தில் எதிரணியையும், வெளியில் அரசாங்க ஊழியர்களையும் ஒடுக்கி ஆட்சி நடத்த பார்க்கின்றது.

ஜனாதிபதி பொலிஸ் ஆணைக்குழுவை விமர்சித்திருந்தார்.

இந்நிலையில் 139 பொலிஸாருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

1990 காலப்பகுதியில் இருந்த அரசி யலையே தற்போது நடத்துவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது.

தமது அரசியல் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதற்காகவே இவ்வாறான செயல்பாடுகள் இடம்பெறுகின்றன- என்றார். (அ)

# கொழும்பில் நடந்த கொலைகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, பெப். 15

மினுவங்கொட பகுதியில் கடந்த 7 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவரால் கல்லொலுவ பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு அதிகாரிகள் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

அதன்படி, நேற்று முன்தினம் மினுவாங்கொடை, யகொடமுல்ல மற்றும் தகோன்ன பகுதிகளில், மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு அதிகாரிகள், இந்தக் குற்றச் செயலுக்கு உதவிய மூன்று சந்தேக நபர்களை 17 கிராம், 350 மில்லிகிராம் ஐஸ் மற்றும் 05 தொலைபேசிகளுடன் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 24 மற்றும் 33 வயதுடையவர்கள் என்றும் யகொடமுல்ல, தகோன்ன பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது .

சந்தேக நபர்களில் ஒருவருக்கு ருவன்வெல்ல நீதவான் நீதிமன்றத்தால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கொழும்பு வடக்கு பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரிகள் நேற்று முன் தினம் முகத்துவாரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் 13 கிராம் 420 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒரு சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வத்தளை, ஹெதல பகுதியைச் சேர்ந்த 21 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இந்த சந்தேக நபர் கடந்த ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதம்பிட்டிய மயானத்திற்கு அருகில் ஒருவரைச் சுட்டுக் கொலை செய்தவர் எனத் தெரியவந்துள்ளது .

மேலும் அவர் போதைப் பொருள் கடத்தல்காரர் ஒருவரின் நெருங்கிய நண்பர் எனவும் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் முகத்துவாரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மிதமான நிலையில் காற்றின் தரம்

கொழும்பு, பெப். 15

நாட்டின் அனைத்து நகரங்களிலும் காற்றின் தரம் மிதமான நிலையில் காணப்படும் என கணிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுற்றாடல் கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவு மற்றும் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாகனப் புகைப் பரீட்சை நம்பிக்கை நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், நேற்று வெள்ளிக்கிழமை நாள் முழுவதும் காற்றின் தர சுட்டெண் 50 தொடக்கம் 86 இற்கு இடையில் இருக்கும். இது நாட்டின் அனைத்து நகரங்களிலும் மிதமான அளவில் இருக்கும் என்பதை குறிக்கின்றது.

நேற்று வியாழக்கிழமை முன் தினம் நாட்டின் அனைத்து நகரங்களிலும் மிதமான நிலையில் காணப்பட்டது.

நாட்டில் அடுத்த சில நாட்களுக்கு பெரும்பாலான நகரங்களில் காற்றின் தர சுட்டெண் மிதமானதாக காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சிவப்பு ரோஜா இறக்குமதி

கொழும்பு, பெப். 15

இம்முறை காதலர் தினத்தையொட்டி இந்தியாவிலிருந்து சிவப்பு ரோஜாக்களை இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

ரோஜாக்கான கேள்வி அதிகரிப்பினால் இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டதாக வியாபாரிகள் கூறுகின்றனர்.

இலங்கையில் காணப்படும் பெரும்பாலான ரோஜாக்கள் தோற்றத்தில் சிறியதாக காணப்படுவதாகவும் அதனைக் கொள்வனவு செய்பவர்கள் அதிகம் விரும்புவதில்லை எனவும் குறிப்பிடுகின்றனர்.

இறக்குமதி செய்யப்படும் சிவப்பு ரோஜாவுக்கு அதிக கேள்வி இருப்பதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (அ)

# மியன்மார் மோசடி மையத்தில் இருந்த இலங்கையர் விடுவிப்பு!

கொழும்பு, பெப். 15

மியன்மாரின் மோசடி மையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் விடுவிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களில் இலங்கையர் ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து இராணுவத்தின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மியன்மாரின் கரேன் மாநிலத்தில் உள்ள தொலைத் தொடர்பு மோசடி மையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 நாடுகளைச் சேர்ந்த சுமார் 250 இற்கும் மேற்பட்டோர் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆயுதக் குழுவால் விடுவிக்கப்பட்டவர்கள் தாய்லாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்களுள் பலர் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் என அந்த தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

அவர்கள் மனித கடத்தலுக்கு உள்ளானவர்களா என்பதைக் கண்டறியும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

# காலிமுகத்திடல் போராட்டத்தின் பின்னணியில் அமெ. முகவரகம்?

## விசாரணை வேண்டும் என்கிறார் ரவி

கொழும்பு, பெப். 15

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்துக்கு தொடர்புகள் இருப்பதாகக் கூறப்படுவது கூட உண்மையாக இருக்கலாம். எனவே இது குறித்து உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-நாடாளாவிய ரீதியில் ஏற்பட்ட மின் துண்டிப்பினால் பொருளாதாரத்தில் பாரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கும். 2022 இல் 14 மணித்தியாலங்கள் காணப்பட்ட மின் துண்டிப்பை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறுத்தினார். ஆனால் இந்த அரசாங்கத்துக்கு ஓரிரு மணித்தியாலங்களில் ஏற்பட்ட சிக்கலைக் கூட முகாமைத்துவம் செய்ய முடியாதுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளதற்கமைய இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தினால் (யு.எஸ்.எயிட்) ஆட்சிகளில் குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பது உண்மையெனில் அது மிகவும் பாரதூரமானதாகும்.

இவ்வா றான செயற்பாடுகள் எம்மைப் போன்ற சிறிய நாடுகளின் இறையாண்மையில் கடுமை யான தாக்கத்தை ஏற்படுத்தும்.

காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்துக்கு தொடர்புகள் இருப்பதாகக் கூறப்படுவது கூட உண்மையாக இருக்கலாம்.

அவ்வா றில்லை எனில் திடீரென எவ்வாறு அந்த கையதொரு ஆர்ப் பாட்டம் தோற்றம் பெற்றது? எனவே இது குறித்து உரிய விசாரணைகள் முன்னெடுக்கப் படவேண்டும்-என்றார். (அ)

# சிகிரியாவை பார்வையிட வந்த பெண்ணிடன் 7 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருள்!

கொழும்பு, பெப். 15

எழுநூறு மில்லியன் ரூபாய்க்கு அதிக மதிப்புள்ள குஷ் ரக போதைப்பொருட்களை சிகிரியா பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

சிகிரியாவைப் பார்வையிட வருகை தந்த தாய்லாந்து பெண் ஒருவரிடமிருந்து இந்த போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பெண்ணின் பயணப் பொதிகளைச் சோதனையிட்ட போது போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், தலா 600 கிராம் எடையுள்ள 23 பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் சம்பந்தப்பட்ட பெண் விடுவிக்கப்பட்டு, சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# கண்டி தேசிய வைத்தியசாலை நிர்மாணத்தை நிறைவு செய்வதற்கு 1,500 மில்லியன் ரூபா நிதி!

கொழும்பு, பெப். 15

தற்போது ஸ்தம்பிதமடைந்துள்ள கண்டி தேசிய வைத்திய சாலையின் 4 முக்கிய அபிவிருத்தித் திட்டங்களின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு சுமார் 1,500 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் தற்போது இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களின் நிர்மாணப் பணிகளைப் பார்வையிடும் கண்காணிப்பு விஜயத்தில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல் சுயலாபங்களுக்காகக் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட திட்டமிடப்படாத இவ்வாறான நிர்மாணப் பணிகள் தற்போது பாரிய சிரமத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், அவற்றை முன்னெடுத்து செல்ல முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலைக்கு நெல்லை கொள்வனவு செய்யாதீர்!

## அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு அறிவிப்பு

கொழும்பு, பெப். 15

**அதிக விலைக்கு நெல்லை கொள்வனவு செய்தாலும் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைக்கமைவாகவே அரிசியை விற்பனை செய்ய முடியும். அதிக விலைக்கு நெல்லை கொள்வனவு செய்து இறுதி தருணத்தில் நெருக்கடிக்குள்ளாக வேண்டாம் என்று பிரதான அரிசி உற்பத்தியாளர்களிடம் கேட்டுக் கொள்கிறோம் என நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்தார்.**

கொழும்பில் உள்ள நுகர்வோர் அதிகார சபையின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரிசி உள்ளிட்ட ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருட்களின் நிர்ணய விலை குறித்து தொடர்ந்து சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளோம்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புக்களை முன்னெடுப்போம். ஆகவே நிர்ணய விலைக்கு மாறாக அதிக விலைக்குப் பொருட்களை விற்பனை செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு வர்த்தகர்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

நெல்லுக்கான உத்தரவாத விலை நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் விலை நிர்ணயத்துக்கு மாறாக அதிக விலைக்கு ஒரு சில பகுதிகளில் தனியார் தரப்பினரும், தனியார் நிறுவனங்களும் நெல்லை கொள்வனவு செய்வதாக அறிய முடிகிறது.

அதிக விலைக்கு நெல்லை கொள்வனவு செய்தாலும் தற்போது அமுலில் உள்ள அரிசிக்கான கட்டுப்பாட்டு விலைக்கு அமைவாகவே அரிசியை விற்பனை செய்ய முடியும். அதிக விலைக்கு நெல்லை கொள்வனவு செய்தமைக்காக அரிசியின் கட்டுப்பாட்டு விலையை திருத்தம் செய்ய முடியாது.

நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைக்கு மாறாக அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் நபரா யின் 1 இலட்சம் முதல் 5 இலட் சம் ரூபா வரையில் தண்டப்ப ணம் விதிக்கப்படும், அல்லது ஆறு மாத கால சிறை தண்டணைக்கு உள்ளாக நேரிடும்-என்றார். (அ)

மகிந்தவின் விடயத்தில்

# அரசாங்கத்தின் செயல் சிறுபிள்ளைத்தனமானது

கொழும்பு, பெப். 15

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விஜேராம மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வசிக்கும் கட்டடத்தின் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. சிறுபிள்ளைத்தனமாக அரசாங்கம் செயற்படுவது கவலைக்குரியது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊடக பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த வசிக்கும் விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்துக்கான நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டதாக வெளியாகிய செய்தி குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வீட்டுக்கான நீர் விநியோகம் துண்டிக்கப்படவில்லை. வியாழக்கிழமை காலை நீர்வடிகாலமைப்பு அதிகார சபையின் சேவையாளர்கள் விஜேராம மாவத்தையில் உள்ள இல்லத்துக்கு வருகை தந்தார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தங்கும் கட்டடம் மகிந்த ராஜபக்ஷவின் வீட்டை அண்மித்ததாகவே உள்ளது. இந்த கட்டடத்துக்கான நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் உத்தியோகத்தர்களை அசௌகரியத்துக்குள்ளாக்க முடியாது.

ஆகவே மகிந்த ராஜ பக்ஷவின் வீட்டில் இருந்து தற்போது அந்த கட்டடத்துக்கு மாற்று வழிமுறை ஊடாக நீர் விநியோகிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு வரையறுக்கப்பட்டுள்ள நிலையில், கடமையில் அமர்த்தப்பட்டுள்ளவர்களை அசௌகரியத்துக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. அரசாங்கத்தின் சிறுபிள்ளைத்தனமான செயற்பாடு கவலைக்குரியது-என்றார். (அ)

# சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 15

அரசாங்கத்துக்கு எதிரான அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைக்க நடவடிக்கை எடுப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், வேறுபல கட்சிகளின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நேற்று முன் தினம் கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவும் கலந்து கொண்டார். (அ)

# கஞ்சா தோட்டம் முற்றுகை ஐவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, பெப். 15

கோனகங்கார பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யால வனப் பகுதியில் கஞ்சாத் தோட்டத்துடன் ஒரு சந்தேக நபரும், 85 கிலோ உலர்ந்த கஞ்சாவுடன் நான்கு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 22 முதல் 42 வயதுக்குட்பட்ட பலாங்கொடை,

மித்தேனியா மற்றும் எம்பிலிப்பிட்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இந்த சுற்றிவளைப்பின் போது, சுமார் 07 அடி உயரம் வரை வளர்ந்த 9,500 கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தென்சூடானில் ஐ.நா. அமைதி காக்கும் பணிக்கு இலங்கை படையினர் பயணம்!




கொழும்பு, பெப். 15

ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் பணிகளுக்கான தெற்கு சூடான் நிலை 2 மருத்துவமனையில் கடமைகளைப் பொறுப்பேற்க இலங்கை இராணுவ மருத்துவப் படையின் 11ஆவது இராணுவ மருத்துவக் குழு நேற்று நாட்டிலிருந்து புறப்பட்டுள்ளது .

நாட்டிலிருந்து புறப்பட்ட 11ஆவது இராணுவ மருத்துவப் படைக் குழுவில் 16 இராணுவ அதிகாரிகள், இரண்டு கடற்படை அதிகாரிகள் மற்றும் 46 சிப்பாய்கள் உட்பட 64 இராணுவ வீரர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

அந்தக் குழுவின் கட்டளை அதிகாரியாக லெப்டினன்ட் கேணல் அ.. எம்.டி.பி. ராஜபக்ஷவும் இரண்டாவது கட்டளை அதிகாரியாக கே.டி.பி.டி.இ.ஏ. விஜேசிங்கேவும் கடமையாற்றவுள்ளனர்.

இதேவேளை இராணுவத் தளபதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, இலங்கை இராணுவ மருத்துவப் படையணியின் படைத் தளபதியும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமுமான மேஜர் ஜெனரல் டி.கே.எஸ்.கே.தொலகே வெளியேறும் 11ஆவது இராணுவ மருத்துவப் படையணிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார்.

இராணுவ மருத்துவப் படையணி தலைமையக நிலையத் தளபதி மேஜர் ஜெனரல் டபிள்யூ.ஏ.யு.எஸ். வனசேகர, சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் அதிகாரிகள் குழு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குறித்த குழுவை வழியனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேசிய மக்கள் சக்தி எம்.பி.யின் வாகனம் மோதி ஒருவர் மரணம்!

கொழும்பு, பெப். 15

புத்தளம் மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் பைசலின் வாகனம் வென்னப்புவ பிரதேசத்தில் நேற்றுக் காலை விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் பயணித்த வாகனம் கொஸ்வத்த, ஹல்ததுவன பகதியில் பயணித்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்ற உறுப்பினர் பயணித்த வாகனம் வீதியை விட்டு விலகி எதிர் திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன.

விபத்தில், படுகாயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிளின் சாரதி உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின்போது வாகனத்தை பாராளுமன்ற உறுப்பினரின் சகோதரரே ஓட்டிச் சென்றதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

விபத்தைத் தொடர்ந்து, விபத்தின்போது வாகனத்தை ஓட்டிச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் பைசலின் சகோதரர் கொஸ்வத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# நாமலின் சட்டப் பட்டம் சி.ஐ.டியினர் விசாரணை!

கொழும்பு, பெப். 15

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ எவ்வாறு சட்டப் படிப்பு பட்டம் பெற்றார் என்பது குறித்து விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சட்டம் தொடர்பான தனது உயர்நிலை கல்வித் தகைமையை மோசடியான முறையில் பெற்றுக்கொண்டார் எனக் கூறப்படும் பல முறைப்பாடுகளைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை தினத்தன்று நாமல் ராஜபக்ஷ மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக அன்றையதினம் அவருடன் பரீட்சைக்கு தோற்றிய இளைஞர் ஒருவர் முறைப்பாடு பதிவு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3500 ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இணைக்க முடிவு

## ஆளுநர் ஜயந்தலால் நடவடிக்கை



மட்டக்களப்பு, பெப்.15

கிழக்கு மாகாணத்தில் நிலவும் 3500 இற்கும் மேற்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிதி அமைச்சிடம் அனுமதி கோரியுள்ள நிலையில், அனுமதி கிடைத்தவுடன் வேலையில்லா பட்டதாரிகளை போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்து நியமிக்க திட்டமிட்டுள்ளோம். அதற்கான வேலைகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணித்துள்ளதாக ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர தெரிவித்தார்.

மட்டக்களப்பு பழைய கச்சேரியில் நேற்று முன்தினம் ஆளுநர் - மக்கள் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது, வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தினர் ஆளுநரை சந்தித்து ஜனாதிபதியிடம் அரச நியமனம் கோரிய மகஜர் ஒன்றை கையளித்தனர்.

இது தொடர்பில் ஆளுநர் கூறுகையில், கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல நாடுபூராகவும் வேலையில்லாப் பட்டதாரிகள் உள்ளனர். அதே வேளை நிதி அமைச்சர் அனுமதியளித்த 375 பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கியுள்ளோம்.

எனவே, சிறிது சிறிதாக அனைவருக்கும் நியமனங்களை அவசரமாக வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். பட்டதாரிகளின் கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஜனாதிபதியிடம் கையளிப்பதாக ஆளுநர் தெரிவித்தார். (எ)

# நீதிமன்றிலிருந்து தப்பியோடிய நபர் தொடர்பில் தகவல் தருக

## பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை



கல்முனை, பெப்.15

கல்முனை நீதிவான் நீதிமன்ற வளாகத்திலிருந்து தப்பியோடிய சந்தேக நபர் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்துக்கு அறியத்தருமாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுள்ளனர். குறித்த சந்தேக நபர் ஐஸ் போதைப்பொருள், ஆடு, மாடு கடத்தல், தங்க நகைகள், தொலைபேசிகள் திருட்டு, போன்ற பல்வேறு சம்பவங்களுடன் தொடர்புடையவராவார்.


21 வயது மதிக்கத்தக்க "அகில்" என்ற பெயரை உடைய சந்தேக நபர் தொடர் பில் அறிந்தால் 0672 260 222, 0771319631 ஆகிய இரு தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கல்முனை நீதிவான் நீதிமன்ற வளாகத்திலிருந்து தப்பியோடிய சந்தேக நபர் துவிச்சக்கரவண்டியில் அம்பாறை,

சம்மாந்து றை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறகர் பகுதிக்கு வருகை தந்து அங்கு நிறுத்தி வைக்கப்பட் டிருந்த மோட்டார் சைக்கிளை திருடி சென்றுள்ளதாக சம் மாந்துறை பொலிஸ் நிலையத் தில் மோட்டார் சைக்கிள் உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே. டி. எஸ். ஜெயலத்தின் ஆலோசனையில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே. சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ)

# முதலையை தடுக்க நடவடிக்கை



சம்மாந்துறை, பெப்.15

கைகாட்டி சந்தி சிறுவர் பூங்காவை மீளத் திறந்து சிறுவர்களின் பாவனைக்கு கையளிப்பதற்காக பூங்கா வளாகத்தை சுத்தம் செய்யும் பணிகள் மற்றும் குளத்தை அண்டிய பிரதேசத்தில் முதலைகள் உட்செல்லாதவாறு வலைகள் பொருத்தும் வேலைத்திட்டம் சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் எம். ஏ. கே. முஹம்மட் தலைமையில் நேற்று முன்தினம் பிரதேச சபை ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்டது. (எ)

# ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா



கல்முனை, பெப்.15

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் ஆசிரியர்களாக கடமையாற்றி இலங்கை அதிபர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா நேற்று ஆசிரியர் நலன்புரி சங்கத்தின் ஏற் பாட்டில் கல்லூரி அதிபர் ஏ. பி. பாத்திமா நஸ்மியா சனூஸ் தலைமையில் நடைபெற்றது. (எ)

# கிளீன் சிறீலங்கா திட்டத்தின் கீழ் கல்முனையில் விசேட நடவடிக்கை



கல்முனை, பெப்.15

அநுர அரசின் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கல்முனை பிரதேச செயலாளர் ரி. எம். எம். அன்சார் தலைமையில் நேற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஏ. எஸ். எம். அஸீம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம். ஜௌபர், சமூர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ. ஆர். எம். சாலிஹ், பொலிஸார், கடற்படையினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டம் தொடர்பில் விளக்கமளித்து அதனை கல்முனை பிராந்தியத்தில் வெற்றி கரமாக நடைமுறைப் படுத்துவது தொடர்பிலும் பிரதேச செயலாளர் விளக்கமளித்தார்.

அம்பாறை மாவட்டத்தின் பாணமை தொடக்கம் பெரிய நீலாவணை வரையான சுமார் 110 கிலோ மீற்றர் நீளமான கடற்கரையோரத்தை சுத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன்,

கரையோரத்தை சுத்தம் செய்வது தொடர்பான வேலைத்திட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை 16ஆம் திகதி மாவட்டத்தின் அனைத்து இடங்களிலும் ஒரே நேரத்தில் நடைமுறைப்படுத்தி அதன் பிரதான நிகழ்வை பொத்துவில் அறுகம்குடாவில் அரசாங்க அதிபரின் தலைமையில் நடத்தப்படவுள்ளது. (எ-01)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிந்தவூரில் நடமாடும் சேவை

கல்முனை, பெப்.15

நிந்தவூர் பிரதேச செயலகத்துடன் இணைந்து மனித அபிவிருத்தி தாபனம் பாதுகாப்பான புலம்பெயர் தொழில் (வெளிநாட்டு வேலை) தொடர்பான நடமாடும் சேவையை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடத்தியது.

நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ. எம். அப்துல் லத்தீப் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் நிந்தவூர் உதவி பிரதேச செயலாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ. சி. அப்துல் அஸீஸ், கல்முனை சட்ட உதவி ஆணைக்குழு சட்ட உத்தியோகத்தர் வி. ரி. ஹசீனா, மனித அபிவிருத்தி தாபன உதவி இணைப்பாளர் எம். ஐ. றியால் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அம்பாறை மாவட்ட காரியாலய அதிகாரிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்

நடமாடும் சேவைக்கு வருகைதந்த பொதுமக்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர் தொழில் தொடர்பிலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஏற்படும் பிரச்னைகளுக்கான தீர்வுகளும், ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன. அத்தோடு, முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. (எ)

# சம்மாந்துறையில் திடீர் சோதனை

கல்முனை, பெப்.15

எதிர்வரும் நோன்பு காலத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் பல்வேறு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எம்.எம். நௌசாத் தலைமையில் நேற்று முன்தினம் இரவு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது, மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற முறையில் பழுதடைந்த மற்றும் களஞ்சியப்படுத்திய உணவுகளை வைத்திருந்த 9 கடைகளின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் இந்தக் கடைகளின் உரிமையாளர்களுக்கு ரூ. 25000, ரூ.10000, ரூ. 5000 என மொத்தமாக ஓர் இலட்சம் ரூபாய் தண்டப்பணம் அறவிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா - ரஷ்யா ஒப்புதல்

## ட்ரம்ப் - புடின் விரைவில் சந்திப்பு

வாஷிங்டன், பெப்.15

**உக்ரைன் மீதான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளை தொடங்கவும், மிக நெருக்கமாக இணைந்து செயல்படவும் அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒப்புக்கொண்டுள்ளன.**

இது தொடர்பில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொலைபேசியில் உரையாடியுள்ளார். இதனை தனது சமூக ஊடக பக்கத்தில் தெரிவித்த ட்ரம்ப், "நாங்கள் ஒவ்வொருவரும் அவரவர் நாடுகளின் பலங்களைப் பற்றியும், ஒன்றாகச் செயல்பட்டால் கிடைக்கும் பெரும் நன்மைகளைப் பற்றியும் பேசினோம். முதலில், நாங்கள் இருவரும் ரஷ்யா - உக்ரைனுடனான போரில் இடம்பெறும் இலட்சக் கணக்கான இறப்புகளை நிறுத்த விரும்புகிறோம்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் இரு நாடுகளின் உயர்மட்ட பிரதிநிதிகள் உடனடியாக பேச்சுவார்த்தைகளைத் தொடங்க ஒப்புக் கொண்டுள்ளோம். அவர்கள் இந்த உரையாடல் குறித்து உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கியை எச்சரிப்பார்கள் என்று தெரிவித்தார். ரஷ்யாவுடனான அமெரிக்க பேச்சுவார்த்தைகளில் உக்ரைன் இணையுமா? என்பதை தெளிவுபடுத்த வெள்ளை மாளிகை அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இதனிடையே, உக்ரைன் குறித்து விவாதிக்க மொஸ்கோவுக்கு வருகை தர டொனால்ட் ட்ரம்புக்கு, விளாடிமிர் புடின் அழைப்பு விடுத்துள்ளதாக ரஷ்ய ஜனாதிபதி மாளிகை கிரெம்ளின் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. மேலும், புடினும் ட்ரம்பும் எதிர்காலத்தில் சந்திக்க ஒப்புக்கொண்டதாகவும் கிரெம்ளின் தெரிவித்துள்ளது.

மேலும், உக்ரைன் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தை உட்பட பரஸ்பர ஆர்வமுள்ள விடயங்களில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்த ரஷ்யா வரவுள்ள அமெரிக்க அதிகாரிகளை வரவேற்கத் தயாராக இருப்பதாகவும் புடினும் ட்ரம்பும் நேரில் சந்தித்துப் பேசுவது உட்பட தனிப்பட்ட தொடர்புகளைத் தொடரவும் ஒப்புக்கொண்டனர் என்றும் தெரிவித்துள்ளது. (எ)

# நாங்கள் இல்லாமல் அமைதி ஒப்பந்தமா?

## ஜெலன்ஸ்கி கேள்வி

பெர்லின், பெப்.15

நாங்கள் இல்லாமல் அமைதி ஒப்பந்தமா? என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கேள்வி எழுப்பியுள்ளார்.

புடினை ட்ரம்ப் சந்திப்பதற்கு முன்னர், ட்ரம்ப்பை சந்திக்க நான் விரும்புகிறேன் என்றும் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் இடையே இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக போர் நீடித்து வரும் நிலையில்,

ரஷ்ய ஜனா திபதி புடினுடன் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தொலைபேசியில் உரையாடினார். அப்போது,

போரை நிறுத்த புதின் ஒப்புக்கொண்டார் என்று ட்ரம்ப் கூறியுள்ளார்.

இந்தநிலையில்,

ஜேர்மனியின் முனிச் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற



பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்க வந்த ஜெலன்ஸ்கி சந்தியாளர்கள் சந்திப்பில் கூறுகையில்,

உக்ரைன் சுதந்திரமான நாடு. எங்கள் பங்களிப்பு இல்லாமல் அமெரிக்கா - ரஷ்யா ஏற்படுத்தும் அமைதி ஒப்பந்தத்தை ஏற்க மாட்டோம்.

தான் விரும் பியபடி எதுவும் நடக்காததால் பேச்சுவார்த்தை நடத்த புடின் விரும்புகிறார்.

ரஷ்யாவுடன் பேச்சு நடத்தும் முன் அமெரிக்கா - உக்ரைன் சேர்ந்து திட் டம் வகுக்க வேண்டும்"- என் றார். (எ)

# இந்தியாவுக்குள் நுழைந்தால் 5 ஆண்டு சிறைத்தண்டனை!

புதுடில்லி, பெப்.15

வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தால் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் இலங்கை மதிப்பில் சுமார் 17 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கும் சட்டத் திருத்தத்தை மத்திய அரசு கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது.

பங்களாதேஷ், மியன்மார், நேபாளம், பாகிஸ்தான், ஆபிரிக்கா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் இந்தியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்து தங்கி விடுகின்றனர். அத்துடன் அவர்கள் கூட்டுறவு அட்டை, ஆதார் அட்டை உட்பட இந்தியர்களுக்கான அனைத்து ஆவணங்களையும் (போலி ஆவணங்கள்) பெற்று வருகின்றனர். இதனால் உள்நாட்டில் அச்சுறுத்தல் ஏற்படுகிறது.

இதைத் தடுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கை களை எடுத்து வருகிறது. குறிப் பாக வெளிநாட்டவர்களை கண்டறிந்து அவர்களை திரும்ப அனுப்பி வருகிறது. இந்த நிலையில், கடவுச்சீட்டு, வீசா அல்லது உரிய ஆவணங்கள் எதுவும் இல்லாமல் இந்தியாவுக்குள் நுழைபவர்களுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை யும் 17 இலட்சம் ரூபாய் அபரா தமும் விதிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. (எ)

# அரசுத் துறையை கலைக்க வேண்டும்



வாஷிங்டன், பெப்.15

அமெரிக்க அரசுத் துறையை ஒட்டுமொத்தமாக கலைத்து விட்டு புதிதாக உருவாக்க வேண்டும் என்று ட்ரம்ப் அரசின் செயல்திறன் துறை தலைவர் எலான் மஸ்க் தெரிவித்தார்.

டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற உலக அரசுத்துறை தொடர்பான உச்சி மாநாட்டில் உரையாற்றிய எலான் மஸ்க் கூறுகையில், "மக்களின் ஜனநாயக ஆட்சி முறைக்கு அரசுத் துறைகள் எதிராக உள்ளன. அரசுத் துறைகளில் ஆட்களை நீக்குவதற்கு பதில் ஒட்டுமொத்தமாக கலைத்துவிட்டு சீரமைப்புகளுக்கு பின்னர் அவற்றை புதிதாக உருவாக்கவேண்டும். வயல்களில் தேவையில்லாத களைகளை வேரோடு அகற்ற வேண்டும். இல்லையென்றால் அது மீண்டும் மீண்டும் வளரக் கூடும். அதேபோன்று தான் அரசுத் துறையும் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும்"- என்றார். (எ)

# அமைதியின் பக்கம்தான் இந்தியா என்றும் நிற்கும்

## இது போருக்கான காலமில்லை - மோடி

வாஷிங்டன், பெப்.15

இந்தியா அமைதியின் பக்கம் நிற்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் அரசு முறை பயணமாக அமெரிக்கா சென்றுள்ளார். இந்த நிலையில், வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை மோடி நேற்றுச் சந்தித்தார்.

பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மோடி கூறுகையில்,"உங்களை மீண்டும் வெள்ளை மாளிகையில் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

140 கோடி இந்திய மக்களின் சார்பாக உங்களை வாழ்த்துகிறேன். இந்திய மக்கள் எனக்கு மூன் றாவது முறையாக பிரதமராக பதவியேற்க வாய்ப்பளித்துள்ளனர். நமது இரு நாடுகளின் முன்னேற்றம் மற்றும் செழுமையை நோக்கி நாம் ஒன்றாகப் பயணிப்போம்.

இந்த யுகம் போருக்கானது இல்லை. உக்ரைன் - ரஷ்யா இடையிலான போரை முடிவுக்கு கொண்டுவர ட்ரம்ப் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு நான் ஆதரவு அளிக்கிறேன். உலகின் மிக பழமையான ஜனநாயக நாடாக அமெரிக்கா உள்ளது.

இந்தியா உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாகும்.

எனவே, இந்தியாவும் அமெரிக்காவும் ஒருங்கிணைந்து வரும் போது மிகப் பெரிய பலம் பெறும். மனித குலத்தின் நலனுக்காக நாங்கள் பணியாற்றுவோம்"-என்றார். (எ)

# ஆப்கானில் நிலநடுக்கம்


காபுல், பெப்.15

ஆப்கானிஸ்தானில் நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 07. 32 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக் டர் அளவுகோலில் 4. 2 ஆக பதிவானது என்று தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

125 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. முன்னதாக, கடந்த 30ஆம் திகதி ஆப்கானிஸ்தானில் 4.2 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.(எ)

# இந்தியா - அமெரிக்கா உறவு மிகவும் சிறப்பாக உள்ளது

## ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு



வாஷிங்டன், பெப்.15

இந்தியா - அமெரிக்கா உறவு மிகவும் சிறப்பாக உள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவுக்கு 2 நாள் பயணமாக நேற்று முன்தினம் சென்றார். இந்த நிலையில் பிரதமர் மோடி, அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை நேற்று வெள்ளிக்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

அப்போது, இரு நாடுகளுக்கும் இடையே முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்த நிலையில், மோடியுடனான சந்திப்பு குறித்து ட்ரம்ப் கூறுகையில்,

"5 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவுக்கு பயணம் செய்ததை மறக்கவே முடியாது. எப்போதும் இல்லாத வகையில் இப்போது இந்தியா - அமெரிக்கா உறவு மிகவும் சிறப்பாக உள்ளது. பிரதமர் மோடி என்னைவிட சிறப்பாக பேச்சுவார்த்தை நடத்துபவராக இருக்கிறார். அந்த விடயத்தில் அவருடன் போட்டி போடுவதற்கு கூட ஏதுமில்லை.

இந்தியாவுக்கு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவை வழங்கும் நாடாக அமெரிக்கா இருக்கும். இந்தியா - மத்திய கிழக்கு - ஐரோப்பா பொருளாதார வழித்தடம் உருவாக்க இணைந்து பணியாற்றுவோம். அமெரிக்க டொலருக்கு எதிராக போட்டி நாணயத்தை உருவாக்கும் நாடுகள் மீது கூடுதல் வரி விதிக்கப்படும்.

இந்தியாவுக்கான இராணுவத் தளபாட விற்பனையை பல பில்லியன் டொலர்கள் அதிகரிக்கவுள்ளோம். ரஷ்யா - உக்ரைன் போர் உட்பட உலகில் நடைபெறும் அனைத்து போர்களையும் முடிவுக்கு கொண்டுவரவேண்டும். உக்ரைன் - ரஷ்யா போரை நிறுத்த உதவும் பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியா -அமெரிக்கா என இரு நாடுகளும் உதவுவோம்.

போர்களில் செலவிடப்படும் பல ஆயிரக்கணக்கான பில்லியன் டொலர்களை ஆக்கபூர்வமான பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டும். வர்த்தகம் மற்றும் முதலீடுகளை ஊக்கு விக்க இந்தியா - அமெரிக்கா திட்டமிட்டுள்ளது"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதமான அணியால் தோற்கடிக்கப்பட்டோம்

## இங்கிலாந்து அணித் தலைவர்

அகமதாபாத், பெப்.15

நாங்கள் ஓர் அற்புதமான அணியால் தோற்கடிக்கப்பட்டோம் என்று இங்கிலாந்து அணித் தலைவர் ஜோஸ் பட்லர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இதில் 3 போட்டிகளிலும் இங்கிலாந்து அணி தோல்வியடைந்தது.

தொடர் தோல்வி குறித்து பட்லர் கூறுகையில்,"எங்களுடைய துடுப்பாட்டத்தை பொறுத்த வரை இந்த சுற்றுப்பயணம் முழுவதுமே இதே மாதிரியாக சென்றது. நாங்கள் ஓர் அற்புதமான அணியால் தோற்கடிக்கப்பட்டோம். துடுப்பாட்டத்தில் எங்களுடைய அணுகுமுறை சரியான ஒன்றாகும். ஆனால், அதை எங்களால் களத்தில் செயல்படுத்த முடியவில்லை.

இந்தியா முதலில் துடுப்பாட்டம் செய்து பெரிய இலக்கை நிர்ணயித்தது. சுப்மன் கில் மிகவும் சிறப்பான இன்னிங்ஸ் விளையாடினார். எங்களுக்கும் நல்ல தொடக்கம் கிடைத்தது. ஆனால், மீண்டும் அதை நாங்கள் சரியாக பயன்படுத்தாத கதையே நிகழ்ந்தது. எனவே, நீண்ட நேரம் துடுப்பாட்டம் செய்வதற்கான வழியைக் கண்டறிய வேண்டும். நாங்கள் இந்த சுற்றுப்பயணத்தில் வலுவான அணிக்கு எதிராக விளையாடினோம். அது தொடர்ந்து சவாலாகவே இருந்தது"- என்றார். (எ)




# ஆஸிக்கு எதிரான 2ஆவது போட்டி 281 ஓட்டங்கள் குவித்த இலங்கை

## குசல் மெண்டிஸ் சதம், அசலங்க அசத்தல்

கொழும்பு, பெப்.15


அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் போட்டியில் குசல் மெண்டிஸ் மற்றும் சரித் அசலங்கவின் பொறுப்பான துடுப்பாட்டத்தின் உதவியுடன் இலங்கை அணி 281 ஓட்டங்கள் குவித்தது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டியில் இலங்கை 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இதனையடுத்து 2ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 281 ஓட்டங்கள் சேர்த்தது.

நிலைத்து நின்று ஆடிய குசல் மெண்டிஸ் சதம் அடித்து அசத்தினார்.

மறுபுறம் அசலங்க அரைச்சதம் அடித்து அசத்தினார். இறுதியில் இலங்கை அணி 50 ஓவர்களில் 4 விக்கெட்கள் மட்டும் இழந்து 281 ஓட்டங்கள்




குவித்தது. இலங்கை தரப்பில் அசலங்க 78 ஓட்டங்களுடனும், ஜனித் லியனகே 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

அவுஸ்திரேலியா தரப்பில் பென் துவார்ஷியஸ், ஆரோன் ஹார்டி, சீன் அப்போட், அடம் ஸம்பா ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். (எ)

# ஐ. பி. எல். தொடக்க திகதியை திடீரென மாற்றிய பி. சி. சி. ஐ.

புதுடில்லி, பெப்.15

ஐ. பி. எல். தொடக்க திகதியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை திடீரென மாற்றியுள்ளது.

ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டியின் 18ஆவது சீசன் இந்த வருடம் நடைபெறவுள்ளது.10 அணிகள் கலந்து கொள்ளும் இந்தத் தொடருக்கான வீரர்களின் மெகா ஏலம் சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் நடைபெற்றது. இந்த ஏலத்தில் 577 வீரர்கள் பங்கேற்றனர். மொத்தத்தில் 62 வெளிநாட்டவர் உட்பட 182 வீரர்கள் விற்கப்பட்டனர்.

இந்தத் தொடர் அடுத்த மாதம் 21ஆம் திகதி தொடங்கும் என சில தினங்களுக்கு முன்னர் தகவல் வெளியாகியிருந்தது. இந்த நிலையில், ஐ. பி. எல். தொடரின் 18ஆவது சீசன் மார்ச் மாதம் 22ஆம் திகதி தொடங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தொடக்க ஆட்டம் கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டர்ன் மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, இந்த ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதும் என தகவல் வெளியாகியுள்ளது. இதையடுத்து மார்ச் 23ஆம் திகதி ஐதராபாத்தில் நடைபெறும் 2ஆவது லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி ராஜஸ்தான் றோயல்ஸை எதிர்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025 ஐ. பி. எல். தொடரின் 2ஆவது தகுதி சுற்று மற்றும் இறுதிப்போட்டி (மே 25ஆம் திகதி) ஆட்டங்கள் கொல்கத்தாவில் நடைபெறும் எனவும், முதலாவது தகுதி சுற்று மற்றும் வெளியேற்றுதல் சுற்று ஆட்டங்கள் ஐதராபாத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கிண்ணம் வென்றால் 65 கோடி ரூபாய் பரிசு

டுபாய், பெப்.15

சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான பரிசுத் தொகையை ஐ. சி. சி. அறிவித்துள்ளது.

கிண்ணத்தை வெல்லும் அணிக்கு இலங்கை மதிப்பில் சுமார் 65 கோடி ரூபாய் பரிசுத்தொகையும், 2ஆவது இடம் பெறும் அணிக்கு 35 கோடி ரூபாயும் அரையிறுதியில் தோல்வியடையும் அணிகளுக்கு 18 கோடி ரூபாயும் பரிசுத்தொகையாக கிடைக்கும் என ஐ. சி. சி. அறிவித்துள்ளது. (எ)

# இந்திய வீரர்களுக்கு பல கட்டுப்பாடுகள்

மும்பை, பெப்.15

இந்திய அணி வீரர்களுக்கு பி. சி. சி. ஐ. பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. 9ஆவது சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி தொடர் 19ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், அண்மையில் முடிவடைந்த நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர்களில் தோல்வியை தழுவியதால் பெரும் விமர்சனங்களை சந்தித்த இந்திய அணியின் வீரர்களுக்கு பி. சி. சி. ஐ. பல கட்டுப்பாடுகளை விதித்தது.

இதன்படி சம்பியன்ஸ் கிண்ண தொடரில் பங்கேற்கவுள்ள இந்திய அணிக்கான கட்டுப்பாடுகளை பி. சி. சி. ஐ. அறிவித்துள்ளது.

இந்தத் தொடருக்கு இந்திய வீரர்கள் தங்கள் மனைவி உள்ளிட்ட குடும்பத்தினரை அழைத்து செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வீரர்கள் மைதானத்துக்கு செல்லும் போதும், பயிற்சி முடிவடைந்த பின்னரும் அணியினருடன்தான் பயணிக்க வேண்டும். பயிற்சியை முடித்து விட்டு உடனே வெளியே செல்லக் கூடாது. அணியினருடன்தான் செல்ல வேண்டும்.

இந்தச் சுற்றுப்பயணத்தின்போது வீரர்கள் தனிப்பட்ட விளம்பர நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக்கூடாது.

தனிப்பட்ட மேலாளர்கள், சமையல் கலைஞர்கள், உதவியாளர்கள் மற்றும் பாதுகாவலர்கள் உள்ளடங்கிய தனிப்பட்ட பணியாளர்களை அழைத்து செல்லக் கூடாது உள்ளிட்ட பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. (எ)

# பயிற்சி போட்டிக்கான அட்டவணை வெளியீடு

டுபாய், பெப்.15

சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி பாகிஸ்தானில் தொடங்குகிறது.இந்த நிலையில், இந்தத் தொடருக்கான பயிற்சி ஆட்டங்களுக்கான போட்டி அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி.) வெளியிட்டுள்ளது.

இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய அணிகள் பயிற்சி போட்டியில் விளையாடவில்லை. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் ஆகிய 5 அணிகள் பயிற்சி போட்டியில் விளையாடுகின்றன.

இந்த பயிற்சி ஆட்டங்களில் பாகிஸ்தான் அணி பாகிஸ்தான் ஷாகீன்ஸ் என்ற பெயரில் 3 அணிகளாக களமிறங்குகிறது.

பாகிஸ்தான் ஷாகீன்ஸ் - ஆப்கானிஸ்தான்,

நியூசிலாந்து - ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஷாகீன்ஸ் - தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் ஷாகீன்ஸ் - பங்களாதேஷ் ஆகிய அணிகள் பயிற்சி போட்டிகளில் விளையாடவுள்ளன. (எ)

# துணை தலைவராக மெஹதி நியமனம்



டாக்கா, பெப்.15

பங்களாதேஷ் அணியின் துணைத் தலைவராக மெஹதி மிராஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

8 அணிகள் மோதும் சம்பியன்ஸ் கிண்ண தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி பாகிஸ்தானில் தொடங்குகிறது.

இந்தத் தொடரில் இடம் பெற்றுள்ள பங்களாதேஷ் அணி நஜ்முல் ஹொசைன் ஷாண்டோ தலைமையில் களம் காண்கிறது. அந்த அணி வரும் 20ஆம் திகதி இந்தியாவையும், 24ஆம் திகதி நியூசிலாந்தையும், 27ஆம் திகதி பாகிஸ்தானையும் சந்திக்கிறது.

இந்த நிலையில், பங்களாதேஷ் அணியின் துணைத் தலைவராக இளம் வீரர் மெஹதி ஹசன் மிராஸ் செயல்படுவார் என அந்த நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (எ)

# பாக். வீரர்களுக்கு ஐ.சி.சி. அபராதம்

கராச்சி, பெப்.15

பாகிஸ்தான் அணியின் மூன்று வீரர்களுக்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை அபராதம் விதித்துள்ளது.

பாகிஸ்தானில் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடர் நடைபெற்று வருகிறது. இதன் கடைசி லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் - தென்னாபிரிக்க அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் 353 ஓட்டங்கள் என்ற இலக்கை வெற்றிகரமாக எட்டி இறுதிப் போட்டிக்கு முன்னேறி சாதனை படைத்தது பாகிஸ்தான் அணி.

இந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்ட வீரர் மேத்யூ பிரீட்ஸ்கே ஓட்டம் எடுக்க ஓடிய போது பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஷஹீன் ஷா அப்ரிடி வாக்குவாதம் செய்தார். இதில் நடுவர் தலையிட்டு சமாதானம் செய்துவைத்தார். இதைத் தொடர்ந்து தெம்பா பவுமா ஓட்ட எடுக்க முற்பட்டு ஆட்டமிழந்தார்.

ஆனால் அவரை பெவிலியன் செல்லவிடாமல் வழிமறித்த சவுத் ஷகீல், கம்ரன் குலாம் ஆகியோர் கொண்டாடினர். இந்த விவகாரங்கள் தொடர்பில் விசாரணை நடத்திய ஐ.சி.சி. நன்னடத்தை விதிகளை மீறியதாக ஷஹீன் ஷா அப்ரிடிக்கு 25 சதவீத அபராதத்தையும் சவுத் ஷகீல், கம்ரன் குலாம் ஆகியோருக்கு 10 சதவீத அபராதத்தையும் விதித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்வெட்டு...

பிறப்பாக்கிகளும் செயலிழந்தன.

இதன் விளைவாக மின்சார தேவையை நிர்வகிக்க முடியாததால், திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் ஒன்றரை மணி நேர மின்வெட்டை அமல்படுத்த இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்தது.

இருப்பினும், நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, நேற்று முன்தினமும் ஒரு மணி நேர மின்வெட்டு மேற்கொள்ளப்படும் என்று இலங்கை மின்சார சபை நேற்று முன் தினம் காலை அறிவித்தது.

இதற்கிடையில், நுரைச்சோலை நிலக்கரி மின் நிலையத்தில் உள்ள மூன்று மின் உற்பத்தி இயந்திரங்களை மீட்டெடுத்து, தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்க மின் பொறியாளர்கள் மற்றும் ஊழியர்கள் விரைவாக செயல்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## காற்றாலை...

முன்னெடுக்கப்படவிருந்த காற்றாலை மின்சார உற்பத்தி மற்றும் மின்விநியோகத் திட்டங்களில் இருந்து வெளியேறுவதாக அதானி கிறீன் எனர்ஜி நிறுவனம் கடந்த புதன்கிழமை அறிவித்ததுடன், இலங்கை முதலீட்டுச் சபைக்கு உத்தியோகபூர்வ கடிதமொன்றையும் அதானி கிறீன் எனர்ஜி நிறுவனம் அனுப்பியிருந்தது.

இலங்கையில் மன்னார் மற்றும் பூநகரி பகுதிகளில் 484 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் புதுப்பிக்கத்தக்க காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கு இத்திட்டத்தின் ஊடாக இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தன.

மின்விநியோகத்தை தென்பகுதி உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு விஸ்தரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், மேலும் 2 மின்சார மையங்களை உருவாக்குவதற்குமான வேலைத் திட்டமும் அதானி நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்படவிருந்தது.

அது தொடர்பாக அதானி நிறுவனம் இலங்கையில் அரச உயர் அதிகாரிகளுடன் 14 சுற்று பேச்சுகளை நடத்தியிருந்தது. அத்துடன் மேற்படி வேலைத்திட்டத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளுக்காக 5 மில்லியன் டொலர் வரை செலவிடப்பட்டும் உள்ளது.

இந்த நிலையில், மின் உற்பத்தி திட்டம் தொடர்பில் மீண்டும் மீளாய்வு பேச்சுவகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவை உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நிறுவனத்துக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும், அது தொடர்பில் நிறுவனத்தின் நிர்வாக சபையில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அந்த கடிதத்தில் எப்படி நிறுவனம் குறிப்பிட்டிருந்தது.

அந்த வகையில், இலங்கையின் இறைமையை முழுமையாக மதிப்பதாகவும், எதிர்காலத்தில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து ஏனைய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு தயாராக உள்ளதாகவும், கௌரவத்துடன் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதிலிருந்து விலகிக் கொள்ள முடிவு செய்துள்ளதாகவும் அதானி நிறுவனம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில், இந்தத் திட்டம் தொடர்பான பேச்சுகளில் ஈடுபட இரு நாட்டு அரசுகளும் இணங்கியுள்ளதாகவும் அடுத்தவாரம் இந்தப் பேச்சுகள் இடம்பெறும் என்றும் இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

## மின்வெட்டுக்கு...

தற்போது நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் மின்பிறப்பாக்கி ஒன்று தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதால் இதுவரை நீடித்து வந்த நாளாந்த மின்வெட்டு முடிவுக்கு வந்துள்ளதாக மின்சக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் நுரைச்சோலையில் உள்ள ஏனைய இரண்டு மின்பிறப்பாக்கிகளை படிப்படியாக தேசிய மின்சார கட்டமைப்புடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (அ)

## யாழில் போராடும்...

பல பட்டதாரிகள் போராட்டத்தில் இருந்து ஒதுங்குகின்றனர். இருப்பினும் எமக்கான வேலைக்காக நாங்கள் தொடர்ச்சியாக போராடி வருகின்றோம்.

தொலைபேசி அழைப்புகள் ஊடாக மிரட்டல்கள் விடுக்கப்படுகின்றன. நாங்கள் அரசுக்கு எதிராக போராடவில்லை, நாங்களும் இந்த அரசாங்கத்தை வரவேற்கிறோம். அரசுக்கு எதிராக செயற்படவேண்டாம், போராட்டம் செய்யவேண்டாம் என ஒரு தரப்பினர் தடுக்கின்றனர் - என்றார்.

இது குறித்து அமைச்சர் சந்திரசேகரனிடம் வினவியவேளை,

புலனாய்வுப் பிரிவினர் அச்சுறுத்தல் விடுக்கக்கூடாது. புலனாய்வுப் பிரிவினர் அச்சுறுத்துவது அந்தக் காலத்தில் இருந்தது. அவர்களுக்கு போராடுவதற்கு உரிமை உள்ளது. போராடுவதற்கு புலனாய்வுப் பிரிவினர் அச்சுறுத்தல் விடுப்பதில்லை. அப்படி அச்சுறுத்தல் விடுப்பார்களாக இருந்தால் அது குறித்து எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

இதுவரை நாட்களும் இந்தப் பட்டதாரிகள் எங்களுடன் பேச்சு நடத்தினார்களா? விளையாட்டாக செயல்படுபவர்களிடம் நீங்கள் இது குறித்து கதைக்காதீர்கள். நாங்கள் உங்களது பிரச்னைகள் குறித்து நிச்சயமாக உள்வாங்கி செயல்படுவோம்-என்றார். (அ-05)

## விசேட...

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அவர் சபைக்கு அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டு மூன்று நீதியரசர்கள் கொண்ட குழாததினால் விசாரிக்கப்பட்ட "உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் விசேடஏற்பாடுகள் எனும் சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை பாராளுமன்றத்துக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

அதன் பிரகாரம் நீதியரசர்கள் குழாத்தின் பெரும்பான்மையினராகிய நீதியரசர்கள் இருவர் பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளனர்.

சட்டமூலம் முழுமையாகவும் குறிப்பாக 2 மற்றும் 3 ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 12(1)ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதால், அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க விசேட பெரும்பான்மையின் மூலம் மாத்திரமே அங்கீகரிக்கப்பட முடியும்.

இதேவேளை, நீதிபதிகள் குழாத்தின் மீதமுள்ள நீதியரசர் பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளார்.

சட்டமூலம் முழுமையாகவும் அல்லது அதன் எந்தவொரு ஏற்பாடும் அரசியலமைப்புடன் முரண்படுவதில்லை என்பதால் அதனை பாராளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையின் மூலம் நிறைவேற்றப்படமுடியும்.

உயர்நீதிமன்றத்தின் முழுமையான தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்-என்றார். (அ)

## கஜேந்திரகுமாரு...

நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் ஆஜரான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு நேற்று மன்றில் முன்னிலையாகுமாறு, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தினால் அழைப்புக் கட்டளை விடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜரான பாராளுமன்ற உறுப்பினரை ஒரு இலட்சம் ரூபாய் சொந்த பிணையில் விடுவித்த நீதிவான் வழக்கை எதிர்வரும் ஜீன் மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதன்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சார்பில், சட்டத்தரணி மகிந்தன் மன்றத்தில் ஆஜராகினார். (அ)

## சஜித் அணிக்கு

கொழும்பு மாவட்ட தலைவர் பதவி தனக்கு வழங்கப்படவில்லை என்பதை ஹர்ஷ டி சில்வா உறுதிப்படுத்தியுள்ளார்.

' கொழும்பு மாவட்டத்திலிருந்து நான்கு தடவைகள் பாராளுமன்றம் தெரிவாகியுள்ளேன். எனவே, பதவிகளை கேட்டுப்பெறவேண்டியதில்லை. மக்கள் என் பக்கம் உள்ளனர்." என்று ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட தலைவராக நளின் பண்டாரவும், புத்தளம் மாவட்ட தலைவராக ஹெக்டர் அப்புஹாமியும், திருகோணமலை மாவட்ட தலைவராக இம்ரான் மஹ்ரூப்பும், மொனறாகலை மாவட்ட தலைவராக ரஞ்சித் மத்தும பண்டாரவும், களுத்துறை மாவட்ட தலைவராக அஜித் பி பெரேராவும், காலி மாவட்ட தலைவராக கயந்த கருணாதிலகவும் நேற்று நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

## தையிட்டி...

வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டி விகாரை விவகாரம் விரைவில் முடிக்கப்படவேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை அது ஏற்படுத்தும்.

உறக்கத்தில் உள்ள இனவாதத்தை மீண்டும் எழும்ப விடக்கூடாது. அதனால் அடிப்படையில் இவ்வாறான பிரச்னைகள் உருவாகுவதை அனுமதிக்க முடியாது.

விகாரை விவாகரத்தில் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள், அப்பிரதேச மக்கள், மதத் தலைவர்கள் , சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினர்களுடன் விரைவில் பேசவுள்ளோம்.

விகாரை கட்டப்பட்டுள்ள காணியை மாத்திரம் தருமாறும், விகாரையை சுற்றியுள்ள ஏனைய காணிகளை மக்களிடம் மீள கையளிக்கத் தயாராக உள்ளதாகவும் விகாராதிபதி தெரிவித்துள்ளார்.

எனவே விகாரை விவாகரத்தில் யாருக்கும் பாதிப்பில்லாத வகையில் அதனைத் தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுப்போம் - என்றார். (அ)

## காலாவதியான...

வைத்தியசாலை கட்டடத்தில் பொருத்தப்பட்ட தீயணைப்புக் கருவிகளை கொண்டு தீயைக் கட்டுப்படுத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தருணத்தில், பொது மக்கள் கடும் அதிருப்தி தெரிவித்தனர். வைத்தியசாலையில் தீயணைப்புக் கருவிகள் காலாவதியாகி, பல ஆண்டுகள் கடந்தபோதும் அவை மாற்றப்படாத நிலை அதிகாரிகளின் அக்கறையின்மையை வெளிப்படுத்துவதாக மக்கள் கூறினர்.

மேலும், புதிய கட்டடத்தில் தீயணைப்பு கருவிகள் இல்லாவிடில், தீ விபத்து பெரிதாக பரவியிருக்கலாம் என்றும் பொதுமக்கள் குறிப்பிட்டனர்.

வைத்தியசாலைகளில் தீயணைப்பு கருவிகள் வருடந்தோறும் புதுப்பிக்கப்படவேண்டும் என்பது மிக முக்கியமான ஓர் விடயமாகும். எனினும், காலாவதியான கருவிகள் பல ஆண்டுகளாக கவனிக்கப்படாமல் இருப்பது வருத்தத்தையளிப்பதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## இலங்கையில்...

முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

இலங்கைக்கு நிலையான எரிசக்திக்கான முக்கிய ஆதாரமாக அணுசக்தியைக் கருதலாம். எனினும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மதிப்பை ஒப்புக்கொண்டாலும், காலநிலை மாற்றம் மற்றும் பிற சுற்றுச்சூழல் சவால்கள் எதிர்காலத்தில் இந்த ஆதாரங்களை முழுமையாக நம்பியிருப்பதைத் தடுக்கும் என்று அவர் கூறினார்.

ரஷ்யாவில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அழைத்ததை அவர் இதன்போது நினைவு கூர்ந்தார்.

எனினும், பல்வேறு காரணங்களால் அந்தப் பயணம் இடம்பெறவில்லை என்றும், அதற்குப் பதிலாக அப்போதைய வெளியுறவு அமைச்சுச் செயலாளர் இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினார் என்றும் அவர் கூறினார்.

மேலும், பிரிக்ஸ் குழுவில் இலங்கை இணைவதற்கான கோரிக்கை தொடர்பில் தற்போது விவாதிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார். (அ)

## அதானியை...

வழங்குவதற்காக அதானியின் திட்டத்தை நிறுத்துவதற்கு நாங்கள் முயற்சிக்கவில்லை.

அதானியின் திட்டத்தை இப்போதைக்கு சரி என ஏற்றால் சில காலங்களில் அந்த முடிவு தவறாக மாறக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

குறித்த காற்றாலை மின் திட்டத்தால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் இலங்கை மின்சார சபைக்கும் பயன் கிட்டுமா என்பது தொடர்பில் பல விடயங்களை ஆராயவேண்டியிருந்ததே தவிர அவர்களை நிறுத்திக்கொண்டு வேறு யாருக்கும் வழங்கும் நோக்கம் இருக்கவில்லை.

நாங்கள் ஏன் அவருக்கு கொடுப்பதா, இவருக்கு கொடுத்தால் நல்லதா எனப் பேசுவதிலும் பார்க்க எமது நாட்டில் உள்ள முதலீட்டாளர்களையும் புலம்பெயர் நாடுகளில் உள்ள முதலீட்டாளர்களையும் அழைத்துத் திட்டங்களை மேற்கொள்வதற்கு எண்ணி உள்ளோம் அதற்கான அழைப்பை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

ஆகவே காற்றாலை மின் திட்டத்திலிருந்து அதானி விலகியதில் எவ்வித அரசியல் உள்நோக்கமும் கிடையாது-என்றார். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மீனவர் பிரச்னைக்கு தீர்வு காண தமிழகத்துடன் பேச்சு தொடரும்!

கொழும்பு, ஏப். 15

இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைவதைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனை குழுவின் முதலாவது கூட்டம் அமைச்சரின் தலைமையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அதற்கமைய, மீனவர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு தமிழகத்துடனும் இந்திய தூதுவருடனும் அவசியமான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

இலங்கை மீனவர்களைப் எதிர்கொண்டுள்ள இந்தப் பிரச்னைக்கு உடனடியாக தீர்வுகள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

## யாழ்.பல்கலை. துணைவேந்தருக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனு!

### சட்டபீட 4ஆம் வருட மாணவன் தாக்கல்

கொழும்பு, பெப். 15

**யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி. சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம், மாணவர் ஒழுக்காற்று அதிகாரி ஆகியோருக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

யாழ்.பல்கலைக்கழக நான்காம் வருட சட்டத்துறை மாணவன் சி.சிவகஜன் என்பவர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் மேற்படி மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி பல்கலைக்கழகத் துணைவேந்தரால் சட்டத்துறை மாணவன் சிவகஜனுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டது.

இந்த வகுப்புத் தடை யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி எஸ்.ரகுராம் முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய விதிக்கப்பட்டுள்ளதாக, துணைவேந்தரால் மாணவனுக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த வகுப்புத் தடையைச் சவாலுக்குட்படுத்தியே சட்டத்துறை மாணவன் சிவகஜனால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தன்மீது பாரதூரமான அவதூறை ஏற்படுத்தும் வகையில் ஊடகங்களுக்கு சிவகஜன் செவ்வி வழங்கினார் என்று பேராசிரியர் ரகுராம் துணைவேந்தரிடம் முறைப்பாடு செய்திருந்தார். இந்த முறைப்பாடு, பேராசிரியர் எஸ்.ரகுராம் கலைப் பீடாதிபதி பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்த மறுநாளே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நாட்டில் மின்தடைக்கு குரங்குதான் காரணம் என்பது பொருத்தமற்றது!

### சபையில் சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 15

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மின் தடைக்கு குரங்குதான் காரணம் என்று கூறுவது பொருத்தமில்லாத ஒரு கருத்தாகும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் ஏற்படும் திடீர் மின் தடைக்கு நிரந்தர தீர்வு வழங்கப்பட வேண்டும். எமது நாட்டில் தற்போது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நாட்டில் இருந்து வெளியேறுகின்றனர். இதற்கு மின் தடையே பிரதான காரணம்.

இதற்கு உரிய அமைச்சர் எடுத்திருக்கும் தீர்வுதான் என்ன? எனவே, இந்த மின்தடைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை நாட்டு மக்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும்-என்றார். (அ)

## அமெரிக்க தூதர் ஜூலி சங் நாமல் எம்.பியுடன் சந்திப்பு



கொழும்பு, பெப். 15

இலங்கைக்கான அமெரிக்க தூதுதர் ஜூலி சங் நேற்று பொதுஜன பெரமுன அலுவலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

ஜூலி சங் நேற்று முற்பகல் 10 மணியளவில் பொதுஜன பெரமுன அலுவலகத்துக்கு சென்று சுமார் ஒன்றரை மணி நேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கலந்துரையாடலில் பரஸ்பர நலன் சார்ந்த விவாதங்களில் ஈடுபட்டதோடு, அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவை வலுப்படுத்த பொதுஜன பெரமுனவின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியதாகவும் நாமல் எம்.பி தனது எக்ஸ் தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பால் கடைப்பிடிக்கப்பட்ட தலையிடாத வெளியுறவுக் கொள்கைக் கொள்கையையும், வரி செலுத்துவோர் நிதியைப் பயன்படுத்துவதில் அதிக வெளிப்படைத் தன்மைக்கு அவர் விடுத்த அழைப்பையும் நாங்கள் பாராட்டுகிறோம்.

மேலும், அமெரிக்க வரி செலுத்துவோர் வளங்களை ஒதுக்குவதில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதில் கவனம் செலுத்தி, இலங்கையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்படாத அரசு சாரா நிறுவனங்கள் யு. எஸ். எய்ட் நிதியைப் பயன்படுத்துவதை விசாரிக்க ஒரு பாராளுமன்றத் தேர்வுக் குழுவை அமைக்க வேண்டும் என்ற பொதுஜன பெரமுனவின் முன்மொழிவு குறித்து சங்கிற்கு விளக்கினோம்-என பதிவிட்டுள்ளார்.

இந்த கலந்துரையாடலில் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சஞ்சீவ எதிரிமன்ன, சி.பி. ரத்நாயக்க, ஜயந்த கெட்டகொட மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக ஆகியோரும் பங்கேற்றனர். (அ)

## மதுபானசாலையை இடமாற்றுமாறு கோரி பூநகரி பிரதேச செயலகம் முன் கவனவீர்ப்பு



கிளிநொச்சி, பெப். 15

கிளிநொச்சி பூநகரி வாடியடி பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியுடன் கூடிய மதுபானச்சாலையை இடம் மாற்றுமாறு கோரி பிரதேச மக்கள் பூநகரி பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஏ32 பிரதான வீதியின் வாடியடிச் சந்தியை அண்மித்த பகுதியில் இயங்கிவரும் விடுதியுடன் கூடிய மதுபானசாலையை இடம் மாற்றுமாறு அப்பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக்கோரிக்கைகளை வலியுறுத்தியே இப்போராட்டத்தில் மக்கள் கலந்துகொண்டனர்.

அதனையடுத்து, பூநகரி பிரதேச செயலாளர் அகிலனிடம் தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரை போராட்டத்தில் பங்கேற்ற மக்கள் கையளித்தனர். (அ)

## முன்னாள் ஜனாதிபதிகள் திடீரென விசேட சந்திப்பு

கொழும்பு, பெப். 15

முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் விசேட சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து சுமார் இரண்டு மணித்தியாலங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, மகிந்த அமரவீர, நிமால் சிறிபால டி சில்வா, உதய கம்மன்பில, நிமல் லான்சா, ராஜித சேனாரத்ன, ருவான் விஜேவர்தன, சாகல ரட்நாயக்க உள்ளிட்டவர்களும் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதாகவும் எதிர்வரும் நாட்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

பேச்சு எதுவும் நடத்தவில்லை எனவும், நட்பு ரீதியான கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது எனவும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார். (அ)

## மனுஷவின் மனுமீதான விசாரணை ஜூன் 25இல்

கொழும்பு, பெப். 15

தென்கொரிய வீசா விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் தன்னை சட்டத்துக்கு புறம்பாக கைது செய்வதை தடுத்து உத்தரவு பிறபிக்குமாறு கோரி, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை எதிர்வரும் ஜூன் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இந்த மனுவில் ஏனைய பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கிடைக்கப்பெறவில்லை என சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மாலி கருணாநாயக்க நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அதன்படி, எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்ப உத்தரவிட்ட நீதிமன்றம், மனுவை ஜூன் 25 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துகொள்ள உத்தரவிட்டுள்ளது.

மனுதாரர் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் ஆஜராகியிருந்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org